# தமிழன்

THAMILAN

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர் : 01, இதழ் : 251 பிலவ வருடம், வைகாசி மாதம் 26ஆம் திகதி புதன்கிழமை (09.06.2021) ஹிஜ்ரி - 1442, ஷவ்வால் பிறை - 27, 0115886187 - பக்கங்கள் 06

'தமிழன்' மின்னிதழ் பதிப்பு e-Paper





# அமைச்சரவை தீர்மானங்கள்

**2021.06.07 அன்று இடம்பெற்ற அமைச்சரவை கூட்டத்தில் எட்டப்பட்ட முடிவுகள்**

**01. தேசிய கலாசார கொள்கை சட்டமூலத்தை தயாரித்தல்**

2007ஆம் ஆண்டில் முதன்முறையாக தேசிய கலாசாரக் கொள்கை தயாரிக்கப்பட்டு வர்த்தமானி அறிவித்தல் மூலம் வெளியிடப்பட்டுள்ளது. பின்னர், குறித்த கலாசாரக் கொள்கை மேலும் திருத்தப்பட்டு தேசிய கலைகள் மற்றும் கலாசாரக் கொள்கையைத் தயாரிப்பதற்காக 2017ஆம் ஆண்டில் அமைச்சரவை அங்கீகாரம் கிடைக்கப்பெற்றாலும், அதற்குரிய மேலதிக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை. அதற்கமைய சமகாலத்திற்குப் பொருத்தமான வகையில் தேசிய கலாசாரக் கொள்கை தயாரிக்கப்படவேண்டியதன் அவசியம் உருவாகியுள்ளது. அதற்கமைய தற்போதுள்ள தேசிய கலாசாரக் கொள்கையை மேலும் திருத்தி புதிய கொள்கையைத் தயாரிப்பதற்காகவும், அதற்காக அனைத்துக் கலாசாரங்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் குறித்த விடயம் தொடர்பாக விரிவான அறிவைக்கொண்ட கல்வியியலாளர்களுடன் கூடிய குழுவொன்றை உருவாக்கிக்கொள்வதற்கும், புத்தசாசன, சமய மற்றும் கலாசார விவகாரங்கள் அமைச்சராக பிரதமர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**02. நூறு நகரங்களை அழகுபடுத்தும் வேலைத்திட்டம் (நூறு நகர வேலைத்திட்டம்)**

ஒழுங்கமைக்கப்படாத அபிவிருத்திகளால் நாடளாவிய ரீதியில் பரந்து காணப்படும் இரண்டாம் மற்றும் மூன்றாம் மட்டங்களில் காணப்படும் நகரங்கள் பல காலமாக நேர்த்தியற்ற, அவலட்சணமான, பொதுமக்களுக்கு அழுத்தங்கள் நிறைந்த நகரமாக காணப்படுவதுடன், குறித்த நகரங்களை முறையான திட்டத்துடன் கூடிய வேலைத்திட்டத்திற்கமைய தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதன் மூலம் பொதுமக்களுக்கு நட்புறவான, கவர்ச்சிகரமான நகரமாக மாற்றுவதற்கு இயலும். அதற்கமைய நாடளாவிய ரீதியில் பரந்து காணப்படும் 100 நகரங்களை அடையாளங்கண்டு அவற்றின் அடிப்படை வசதிகளை மேம்படுத்தி, குறித்த நகரங்களை முறையாக அழகுபடுத்துவதற்காக ஏற்புடைய உட்கட்டமைப்பு வசதிகளை வழங்கும் பொறுப்புகள் ஒப்படைக்கப்பட்டுள்ள அரசாங்க நிறுவனங்கள் மற்றும் ஏனைய அனைத்துத் தரப்பினர்களின் ஒத்துழைப்புடன் நூறு நகரங்கள் எனும் பெயரில் வேலைத்திட்டமொன்றை நகர அபிவிருத்தி அதிகாரசபை மூலம் நடைமுறைப்படுத்துவதற்காக நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சராக பிரதமர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**03. இலங்கை பல்கலைக்கழகங்கள் மற்றும் வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களுக்கிடையே கல்வி ஒத்துழைப்புகளை நோக்கமாகக்கொண்டு புரிந்துணர்வு ஒப்பந்தங்களை மேற்கொள்ளல்**

அரச கொள்கைப் பிரகடனத்திற்கமைய எமது நாட்டிலுள்ள பல்கலைக்கழகங்களை உலக தரப்படுத்தல் குறிகாட்டிகளுக்கமைய உயர்மட்டத்திற்கு மேம்படுத்துவதற்காக உயர்கல்விக்கான ஒத்துழைப்புகளை மேம்படுத்தும் நோக்கில் வெளிநாட்டு பல்கலைக்கழகங்களுடன் கீழ்வரும் புரிந்துணர்வு ஒப்பந்தங்களை மேற்கொள்வதற்கு கல்வி அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

- ★ ஸ்ரீ ஜயவர்தன பல்கலைக்கழகம் மற்றும் இந்தியாவின் மணிபால் உயர்கல்விக் கல்லூரியின் மணிபால் உயிரியல் விஞ்ஞானக் கல்லூரிக்கும் இடையேயான கூட்டு ஒத்துழைப்பு செயற்பாடுகளுக்கான புரிந்துணர்வு ஒப்பந்தம்.
- ★ பேராதனைப் பல்கலைக்கழகம் மற்றும் பிராந்திய ஒத்துழைப்புக்கான தெற்காசிய நாடுகளின் ஒன்றியத்தின் விவசாய நிலையத்திற்கும் இடையேயான கூட்டுத் தொழில்நுட்ப ஒத்துழைப்புச் செயற்பாடுகளுக்கான புரிந்துணர்வு ஒப்பந்தம்.
- ★ கொழும்பு பல்கலைக்கழகம் மற்றும் மலேஷியாவின் மலாயா பல்கலைக்கழகத்திற்கும் இடையேயான புரிந்துணர்வு ஒப்பந்தம்.
- ★ இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் அவுஸ்திரேலியாவின் மூன்றாம்நிலைக் கல்வி தரப்பண்பு மற்றும் தரநியமங்கள் தொடர்பான பிரதிநிதித்துவ நிறுவனத்திற்கும் இடையேயான தகவல் பரிமாற்றம், தரவுகளை சான்றுப்படுத்தலின் போதான ஒத்துழைப்புகள் மற்றும் நிறுவனங்களை வலையமைப்பாக்குதல் போன்றவற்றுக்கான புரிந்துணர்வு ஒப்பந்தம்.
- ★ பேராதனை பல்கலைக்கழக விவசாய பீடத்தின் விவசாய விரிவாக்கல் கல்விப் பிரிவு மற்றும் கனடாவின் அல்பர்டா பல்கலைக்கழகத்தின் விரிவாக்கல் பீடத்துடனான புரிந்துணர்வு ஒப்பந்தம்.

**04. நாடளாவிய ரீதியில் பிரதேச செயலகப் பிரிவு மட்டத்தில் தொழிற்சாலைகளை நிலைப்படுத்தல் மற்றும் தொழில் விருத்திக்கான முதலீட்டு வாய்ப்புகளை ஊக்குவிக்கும் விசேட வேலைத்திட்டம்**

அபிவிருத்தியில் பிரதேச ரீதியான சமனற்ற தன்மையைக் குறைத்தல், கிராமிய வளங்களில் உயரிய நன்மைகளைப் பெறல் மற்றும் கிராமங்களில் தொழில்வாய்ப்புகளை ஏற்படுத்துவதற்காக கைத்தொழில்துறையில் ஈடுபட்டுள்ள தொழில் முயற்சியாளர்களை ஊக்குவிக்கும் நோக்கில் கைத்தொழில் அமைச்சும் விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சும் இணைந்து பிரதேச செயலக மட்டத்தில் கைத்தொழில் மற்றும் தொழில் முயற்சி அபிவிருத்தி வேலைத்திட்டமொன்று நடைமுறைப்படுத்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. அதன்கீழ் குறிப்பாக, சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்களை ஊக்குவித்தல், அதன்மூலம் கிராமிய மட்டத்தில் பலம்வாய்ந்த தொழில் முயற்சியாளர்களின் வலையமைப்பை உருவாக்கி தொழில் வாய்ப்புகளை அதிகரித்தல், பிரதேச ரீதியாகப் பரந்து காணப்படும் வளங்கள்/மூலப்பொருட்களைப் பயன்படுத்தி பெறுமதிசேர் உற்பத்திகளை மேம்படுத்தல் மற்றும் ஏற்றுமதி ஊக்குவிப்பு மற்றும் இறக்குமதிக்கான பதிலீடுகளை ஊக்குவித்தல் போன்றவற்றை நோக்கமாகக்கொண்டு, இந்நிகழ்ச்சித்திட்டத்தின்கீழ் குறைந்தபட்சம் அனைத்து பிரதேச செயலகப் பிரிவுகளிலும் ஒரு கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. அதற்கமைய, முன்மொழியப்பட்டுள்ள வேலைத்திட்டத்தின் கீழ் குறைந்தபட்சம் 100 மில்லியன் ரூபாவை முதலீடு செய்யும், 50 தொழில் வாய்ப்புகளை உருவாக்கும் தொழிற்சாலைகள்/ வியாபாரங்களை ஆரம்பிக்கும் தொழில் முயற்சியாளர்கள்/ முதலீட்டாளர்களுக்கு ஊக்குவிப்பு சலுகைகள் மற்றும் வசதிகளை வழங்குவதற்காக கைத்தொழில் அமைச்சரும் விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சரும் இணைந்து சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

02»

## முதலாம் தர மாணவர் சேர்க்கை விண்ணப்ப காலம் நீடிப்பு

2022 ஆம் ஆண்டுக்கு அரச பாடசாலைகளில் முதலாம் தரத்துக்கு மாணவர்களை இணைத்துக்கொள்வதற்கான விண்ணப்பப்படிவம் சமர்ப்பிக்கும் காலம் நீடிக்கப்பட்டுள்ளது. அதன்படி, எதிர்வரும் ஜூலை 31ஆம் திகதிவரை விண்ணப்பங்களை சமர்ப்பிக்க முடியுமென கல்வியமைச்சு அறிவித்துள்ளது.

# சிறுநீரக - புற்றுநோயால் தினசரி 100 பேர் மரணம்

## வருடாந்தம் 2,38,000 பேர் பாதிக்கப்படுவதாக சுகாதார அமைச்சர் பவித்ரா சபையில் தெரிவிப்பு



*•யோ.தர்மராஜ்*

நாட்டில் ஒரு நாளில் புற்றுநோயால் 54 பேரும் சிறுநீரக நோயால் 46 பேரும் மரணிப்பதாகவும் வருடத்தில் சராசரியாக ஒரு இலட்சத்து 64 ஆயிரம் பேர் சிறுநீரக நோய்க்குள்ளாவதுடன், 74 ஆயிரம் பேர் புற்றுநோய்க்குள்ளாவதாகவும் சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி நாடாளுமன்றத்தில் நேற்று தெரிவித்தார்.

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் நேற்று இடம்பெற்ற நாடாளுமன்றத்தின் சபை ஒத்திவைப்பு விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

கொரோனா தொற்று தொடர்பாக நான் பல முறை நாடாளுமன்றத்தில் பதிலளித்துள்ளேன். எனினும், தற்போது எதிர்க்கட்சியில் கொண்டுவந்த யோசனையானது, 5 ஆயிரம் ரூபா கொடுப்பனவு, எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல், விவசாயப் பொருட்களை பகிர்தல் போன்ற பிரச்சினைகளுக்கானதல்ல. மாறாக, இரசாயன உர இறக்குமதியை நிறுத்தி, சேதனப் பசளை உற்பத்தியை முன்னெடுக்கும் அரசாங்கத்தின் யோசனையை தடுப்பதற்கே எதிர்க்கட்சியினால் கொரோனா தொடர்பான யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது.

கொரோனா தொற்று நிலைமை குறித்து எதிர்க்கட்சியினர் முதலைக்கண்ணீர் வடிக்கின்றனர்.

ஆனால், தற்போது கிடைக்கும் தகவல்களுக்கமைய ஒரு வருடத்திற்கு 30 ஆயிரத்தால் சிறுநீரக நோயாளர்கள் அதிகரிக்கின்றனர். சிறுநீரக நோயினால் நாளொன்றுக்கு 46 பேர் உயிரிழக்கின்றனர்.

02»

# எதிர்க்கட்சி தலைவராவார் ரணில்

## அமைச்சர் மஹிந்தானந்த ஊகம்

*•யோ.தர்மராஜ்*

நாடாளுமன்றத்தின் அடுத்த அமர்வின்போது எதிர்க்கட்சித் தலைவர் ரணிலா, சஜித்தா என்ற குழப்பம் எதிர்க்கட்சிக்குள் ஏற்பட்டுள்ளது. என்ன கூறினாலும் அடுத்த நாடாளுமன்ற அமர்வில் ரணிலே எதிர்க்கட்சித் தலைவராக இருப்பார் என விவசாய அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே தெரிவித்தார்.

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் நேற்று இடம்பெற்ற நாடாளுமன்றத்தின் சபை ஒத்திவைப்பு விவாத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் உரையாற்றுகையில்,

முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இன்னும் ஒரு வாரத்தில் நாடாளுமன்றத்திற்கு வருகை தரவுள்ளார். அவர் நாடாளுமன்றத்திற்கு வருகை தரும்போது அவருக்கு...

02»



நாட்டில் நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக மல்வானை பகுதியிலிருந்து நேற்று படகில் வெளியேறும் குடும்பத்தினரை படத்தில் காணலாம். (படப்பிடிப்பு:- சமன் அபேசிறிவர்தன)

# சேதனப் பசளை பயன்பாட்டின்போது சவால்களை பொருட்படுத்த வேண்டாம்

## மக்கள் பிரதிநிதிகளிடம் ஜனாதிபதி கோட்டாபய வேண்டுகோள்

சேதனப் பசளையைப் பயன்பாட்டுக்கு கொண்டுவரும்போது எதிர்நோக்கும் சவால்களைப் பொருட்படுத்தாது, மக்களின் நலனுக்காக மக்கள் பிரதிநிதிகள் முன்னோக்கிச் செல்லவேண்டும் என்று ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்தார்.

மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவர்களுடன் நேற்று முன்தினம் பிற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

02»

# 17 வீதமான சமூக வலைத்தளங்களால் சமாதானத்துக்கு பெரும் அச்சுறுத்தல்

## - அமைச்சர் கெஹேலிய தெரிவிப்பு

*•யோ.தர்மராஜ்*

நாட்டில் 17 வீதமான சமூக வலைத்தள கணக்குகள் உரிமையற்ற நிலையில், வெவ்வேறு நிகழ்ச்சி நிரல்களில் செயற்படுவதால் பிரதான ஊடகங்களின் சரியான வழிகாட்டல்கள் கூட கேள்விக்குறியாக்கப்படுகின்றன. இதனால், நாட்டின் சமாதானத்திற்கும் பெரும் அச்சுறுத்தல் ஏற்படுவதனாலேயே சட்ட நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கு தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக அமைச்சரவைப் பேச்சாளரும் ஊடகத்துறை அமைச்சருமான கெஹேலிய ரம்புக்வெல்ல தெரிவித்துள்ளார்.

அரசாங்க தகவல் ...

02»



# தீவிரமாக ஆராய்ந்த பின்னரே பயணக்கட்டுப்பாடு நீக்கப்படும்

## அரசாங்கம் அறிவிப்பு


*•யோ.தர்மராஜ்*

கொரோனா தொற்றுப்பரவலை கட்டுப்படுத்துவதற்கான முக்கிய செயற்பாடாகவே பயணக்கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில், பயணக்கட்டுப்பாட்டை நீக்குவதாயின், அதனை அவதானமாகவும் தீவிரமாகவும் ஆராய்ந்தே அரசாங்கம் முடிவெடுக்கும் என அமைச்சரவைப் பேச்சாளரும் ஊடகத்துறை அமைச்சருமான கெஹேலிய ரம்புக்வெல்ல தெரிவித்துள்ளார். அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று இடம்பெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும்...

02»

# பயங்கரவாத தடைச்சட்டத்தில் கைதாவோரை தடுத்துவைக்க

## விசேட வர்த்தமானி வெளியீடு



*•மணிராஜ் சசிதரன்*

பயங்கரவாத தடைச்சட்டத்தின்கீழ் கைதுசெய்யப்படுபவர்கள் தொடர்ந்து தடுத்துவைக்கப்பட்டிருக்கும் இடமாக கொழும்பிலுள்ள பயங்கரவாத தடுப்பு மற்றும் விசாரணைப் பிரிவு பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. விசேட வர்த்தமானி அறிவித்தல் ஒன்று வெளியிடப்பட்டு இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

02»

# சீரற்ற காலநிலை: 4 மாவட்டங்களுக்கு சிவப்பு எச்சரிக்கை

*•நா. தினுஷா*

நாட்டில் சீரற்ற காலநிலை காரணமாக நான்கு மாவட்டங்களுக்கு மண்சரிவு சிவப்பு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. களுத்துறை, கேகாலை, நுவரெலியா, இரத்தினபுரி ஆகிய மாவட்டங்களுக்கு இவ்வாறு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனம் நேற்று மாலை அறிவித்துள்ளது.

களுத்துறையில் மத்துகம, பாலிந்தநுவர, புளத்சிங்ஹள, இங்கிரிய, அகலவத்தை ஆகிய பகுதிகளுக்கும் கேகாலையில் தெரனியகல, வறக்காபொல, ருவன்வெல்ல,...

02»

# மக்கள் தீர்மானித்தால் பதவி விலகத் தயார்

## அமைச்சர் சரத் 'தமிழனிடம்' தெரிவிப்பு



*•யோ.தர்மராஜ்*

14 நாட்களுக்கு தனிமைப்படுத்தலுக்கு அழைத்துச் செல்வோருக்கு மாற்றுவதற்கு உடை இல்லை எனும்போது, அவர்களுக்கு தேவையான உடைகளை பெற்றுக்கொள்வதற்கு உதவி செய்ததால் அமைச்சு பதவியிலிருந்து விலகுமாறு கூற முடியுமா? அவ்வாறு, உதவி செய்தது தவறு என மக்கள் தீர்மானித்தால் அமைச்சு பதவியிலிருந்து நான் விலகுவதற்கு தயாராக...

02»

# மெல்பர்னில் டெல்டா திரிபு இலங்கையருடாக பரவியது

**இலங்கையர் ஒருவரின் மூலமாகவே அவுஸ்திரேலியாவின் மெல்பர்ன் நகரில் டெல்டா திரிபு (இந்திய திரிபு) பரவியதென ஆய்வுகளிலிருந்து கண்டறியப்பட்டுள்ளது.**

**இலங்கையிலிருந்து சென்று தனிமைப்படுத்தலில் இருந்த நபர் ஒருவருக்கு மேற்கொள்ளப்பட்ட பரிசோதனைகளிலேயே இந்த விடயம் தெரியவந்துள்ளது. இது தொடர்பில் மே மாதம் 8ஆம் திகதி பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.**

**அதற்கு முன்னதாக அவ்வாறானதொரு வைரஸ் மெல்பர்னில் பதிவாகவில்லையென பிராந்திய சுகாதார அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.**

# நயினை நாகபூசணி அம்மன் உற்சவம் பிற்போடப்பட்டது

வரலாற்றுப் பிரசித்திபெற்ற நயினாதீவு நாகபூசணி அம்மன் ஆலய வருடாந்த உற்சவம் எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 6ஆம் திகதிக்கு பிற்போடப்பட்டுள்ளதாக ஆலய அறங்காவலர் சபையினர் அறிவித்துள்ளனர்.

தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள கொரோனா தொற்று சூழ்நிலை காரணமாக இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இம்மாதம் 10ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவிருந்த ஆலய வருடாந்த மகோற்சவத்தை மட்டுப்படுத்தப்பட்ட அடியவர்களுடன் நடத்துவதற்கு முன்னர் தீர்மானம் எடுக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில், நேற்றுக் காலை அவசரமாக கூடிய ஆலய அறங்காவலர் சபையினர் குறித்த தீர்மானத்தை எடுத்துள்ளதாக அறிவித்துள்ளனர்.



*சீரற்ற காலநிலை காரணமாக கொழும்பு - அவிசாவளை பிரதான வீதி கடுவலையில் மழைவெள்ளம் பாதிப்பை எதிர்நோக்கியுள்ள மக்களை படத்தில் காணலாம். (படப்பிடிப்பு: பிரதீப் தம்பரகே)*

# இருபதுக்கு 20 உலகக்கிண்ண தொடரை இலங்கையில் நடத்த பேச்சு

இலங்கை கிரிக்கெட் சபையானது, ஐ.சி.சி. இருபதுக்கு 20 உலகக்கிண்ணத் தொடரை இலங்கையில் நடத்துவதற்கு இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையிடம் பேச்சுவார்த்தைகளை நடத்தியுள்ளதாகவும் இது தொடர்பான ஆரம்பகட்ட பேச்சுவார்த்தைகள் தற்போது நடைபெற்றுள்ளதாகவும் இந்திய ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

2021ஆம் ஆண்டுக்கான ஐ.சி.சி. இருபதுக்கு 20 உலகக்கிண்ணத் தொடரை இந்தியாவிலேயே நடத்துவதற்கு இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை பல கோணத்திலும் முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. இந்நிலையில், தற்போது இந்தியாவில் கொரோனா வைரஸ் தாக்கம் மிக அதிகமாக காணப்படுவதால் போட்டிகளை இந்தியாவில் நடத்துவது சாத்தியமற்றதாக காணப்படுகிறது.

ஐக்கிய அரபு இராச்சியத்தின் 3 மைதானங்கள் மற்றும் ஓமானின் ஒரு மைதானத்துடன் நான்கு இடங்களில் போட்டிகளை நடத்துவதற்கு இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது.

## 17 வீதமான...

திணைக்களத்தில் நேற்று இடம்பெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டபோது, புலானாய்வுப் பிரிவினரால் சமூக வலைத்தளங்கள் கண்காணிப்படவுள்ளதாக பொலிஸ் பேச்சாளர் தெரிவித்த விடயம் தொடர்பில் எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

சமூக வலைத்தளங்கள் குறித்து கடந்த மூன்று வாரங்களுக்கு முன்னர் அமைச்சரவைப்பத்திரம் ஒன்று சமர்ப்பிக்கப்பட்டது. அதன்படி, 17 வீதமான சமூக வலைத்தள கணக்குகள் உரிமையற்ற வகையில் இருக்கின்றன.

இந்த உரிமையற்ற வகையில் இருக்கும் வலைத்தளங்கள் பொறுப்பற்ற வகையில் நாட்டுக்கும் நாட்டு மக்களும் பல குரோதமான விடயங்களை பரப்புவதால் நாட்டின் ஒற்றுமைக்குப் பாதிப்பாக அமைகின்றது என்பதாலேயே அவற்றின் மீது நடவடிக்கை எடுப்பதற்கு அரசாங்கம் தீர்மானம் எடுத்தது. உலக நாடுகள் பலவும் இவ்வாறான நடவடிக்கைகளை எடுத்துள்ளன. குறிப்பாக இந்தியா, அவுஸ்திரேலியா மற்றும் 5 நட்சத்திர ஜனநாயக நாடுகளில் இவ்வாறான சட்டமூலம் உருவாக்கப்பட்டுள்ளது.

நாட்டில் சிறந்த ஊடகவியலாளர்கள் இருக்கின்ற நிலையில், அவர்கள் வெளியிடும் உண்மையான தகவல்களுக்கும் இவ்வாறான சமூக வலைத்தள கணக்குகள் உண்மையான செய்திகளை மக்களுக்கு வழங்குவதால் பாரிய சவாலாகவுள்ளது.

வெவ்வேறு நிகழ்ச்சி நிரல்களை செயற்படுத்தும் நோக்கில் குரோதமான முறையில் தகவல்களை வழங்குவதற்காக செயற்படும் இவ்வாறான சமூக ஊடகங்களால் பிரதான ஊடகங்களின் சரியான வழிகாட்டல்கள் கூட கேள்விக்குள்ளாக்கப்படுகின்றன.

ஆகவே, இவ்வாறான செயற்பாட்டினால் பிரதான ஊடகங்களும் ஊடகவியலாளர்களும் மகிழ்ச்சியடைய வேண்டும். இது தொடர்பில் ஒரு மாதத்துக்கு முன்னர் நீதி அமைச்சு மற்றும் ஊடக அமைச்சு இணைந்து சமர்ப்பித்த கூட்டு அமைச்சரவைப்பத்திரத்துக்கேற்ப தற்போது நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன – என்றார்.

## சீரற்ற காலநிலை...

மாவனல்லை, ரம்புக்கனை, புளத்கொஹூபிட்டிய, யட்டியாந்தோட்டை, தெஹியோவிட்ட, அரநாயக்க, கலிகமுவ ஆகிய பகுதிகளுக்கும் சிவப்பு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, நுவரெலியாவில் அம்பகமுவவுக்கும் இரத்தினபுரி மாவட்டத்தில் எஹலியகொடை, கலவானை, அயகம, கிரியெல்ல ஆகிய பகுதிகளுக்கும் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

## சேதனப் பசளை ...

ஆரோக்கியம் மற்றும் வினைத்திறன்வாய்ந்த பிரஜைகளை உருவாக்குவதற்கு, நச்சுத்தன்மையற்ற உணவுக்கான மக்களின் உரிமைகள், 'சுபீட்சத்தின் நோக்கு' கொள்கைப் பிரகடனத்தில் உறுதிசெய்யப்பட்டுள்ளது. இதற்காக, விவசாயத்துறைக்குள் சேதனப் பசளைப் பாவனையைக் கொண்டுவருவது அரசாங்கத்தின் உறுதியான நிலைப்பாடாகும். இந்த நிகழ்ச்சித்திட்டம், சில தரப்பினரின் விமர்சனங்களுக்கு உள்ளானபோதும், எதிர்காலத் தலைமுறையின் நலனுக்காக அது நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்று ஜனாதிபதி வலியுறுத்தினார்.

தட்டுப்பாட்டை ஏற்படுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டபோதும், அடுத்த போகம் வரையில் தேவையான உரம் போதுமானளவு இறக்குமதி செய்யப்பட்டுள்ளது. எனவே, அனைத்து விவசாய நடவடிக்கைகளையும் தடையின்றி மேற்கொள்ள முடியும் என்றும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

சேதன விவசாயத்துக்கு மாறுவது அரசாங்கம் திடீரென எடுத்த முடிவன்று. 'சுபீட்சத்தின் நோக்கு' கொள்கைப் பிரகடனத்திலும் கடந்த வரவு-செலவுத் திட்டத்திலும், இது குறித்த அரசாங்கத்தின் நிலைப்பாடு முன்வைக்கப்பட்டிருந்தது. எனினும், சேதனப் பசளை தொடர்பில் விவசாயிகளுக்கு அறிவூட்டப்படாமை தேவையற்ற அச்சத்துக்கு காரணமாக அமைந்துள்ளது.

சேதனப் பசளை விவசாயத்துக்கு இலங்கையில் அதிக வாய்ப்புகள் உள்ளன. இந்த நிலைமாற்றக் காலப்பகுதியில் விவசாயிகள் முகங்கொடுக்க வேண்டி ஏற்படும் கஷ்டங்களை நிர்வகிக்க, அதிகபட்ச நிவாரணங்களை வழங்குவதே அரசாங்கத்தின் கொள்கையாகும் என்றும் ஜனாதிபதி குறிப்பிட்டார். சில தசாப்தங்களாக இரசாயனப் பசளைகளைப் பயன்படுத்திய காரணத்தினால், அதிகளவானவர்கள் பல்வேறு தொற்றா நோய்களுக்கு உள்ளாகியுள்ளனர். இந்த நிலைமைகளிலிருந்து எதிர்காலத் தலைமுறையைப் பாதுகாப்பது நாட்டிலுள்ள அனைவரதும் பொறுப்பாகும் என்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, ஜனாதிபதியின் செயலாளர் பி.பீ.ஜயசுந்தர மற்றும் அமைச்சுகளின் செயலாளர்கள் உள்ளிட்டோர் இந்த நிகழ்வில் கலந்துகொண்டிருந்தனர்.

## தீவிரமாக...

செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டபோது, பயணக்கட்டுப்பாடு தளர்த்தப்படுவது குறித்து எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

தொற்றுப்பரவலை கட்டுப்படுத்துவதற்கான முக்கிய செயற்பாடாகவே பயணக்கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில், பயணக்கட்டுப்பாட்டை நீக்குவதாயின், அதனை அவதானமாகவும் தீவிரமாகவும் ஆராய்ந்தே அரசாங்கம் முடிவெடுக்கும். அதன்படி, பயணக்கட்டுப்பாடு நீக்கப்பட்டால் அதற்குப் பதிலாக பல மாற்றுவழிகளையும் முறையாக அரசாங்கம் முன்னெடுக்கும்.

இதேவேளை, உலகளவில் சுற்றுலாத்துறை பொருளாதாரத்தில் முக்கிய பங்கு வகிக்கின்றது. குறிப்பாக, 11 வீதமான மனித வளங்கள் இந்த சுற்றுலாத்துறைக்கே பயன்படுத்தப்படுகின்றன. ஆகவே, இலங்கை போன்ற நாடுகளில் சுற்றுலாத்துறையை மேம்படுத்துவது முக்கியமான ஒன்றாகவுள்ளது. இவ்வாறு சுற்றுலாத்துறையை மேம்படுத்தும்போது பொருளாரத்திற்கு அது மிகப்பெரும் பங்களிப்பாக அமையும். எனினும், கொரோனா தொற்றுக்கு மத்தியில் சுற்றுலாத்துறையை மேம்படுத்துவது மற்றும் சுற்றுலாத்துறை திறப்பது என்பது குறித்து அரசாங்கம் ஆராய்ந்தே முடிவுகளை எடுக்கும்.

பயணக்கட்டுப்பாடுகளினால் கிடைத்த பிரதிபலனை தொடர்ந்து தக்கவைக்கும் வகையிலேயே அரசாங்கத்தின் அடுத்தகட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும். பயணக்கட்டுப்பாடு நீக்கப்பட்டு ஆபத்தான நிலைமைக்குச் செல்வதை ஒருபோதும் அரசாங்கம் அனுமதிக்காது – என்றார்.

## மக்கள் தீர்மானித்தால்...

இருக்கின்றேன் என பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ரியர் சரத் வீரசேகர தெரிவித்தார்.

நடிகை பியுமி ஹன்சமாலியின் விடயத்தில் தலையிட்ட பொ மக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர, தன்னுடைய அமைச்சு பதவியிலிருந்து விலகுமாறு அரசாங்கத்திற்குள் எதிர்ப்புகள் எழுந்துள்ளமை குறித்து வினவியபோதே அவர் இதனை 'தமிழன்' நாளிதழுக்குத் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது,

பியுமி ஹன்சமாலி உள்ளிட்ட சிலரை காலையில் நீதிமன்றத்தில் அனுமதித்த பின்னர், அதே உடையில் மாலை அவர்களை பசறை தனிமைப்படுத்தல் நிலையத்திற்கு அழைத்துச் சென்றனர். இதன்போது, அங்கிருந்து சட்டத்தரணி ஒருவர் எனக்கு அழைப்பை ஏற்படுத்தி, பியுமி ஹன்சமாலி உள்ளிட்டவர்களை அணிந்திருக்கும் ஆடையுடனே தனிமைப்படுத்தலுக்கு அழைத்துச் செல்கின்றனர். அவர்களுக்கு மாற்று உடைகள் ஏதுவும் இல்லை. ஆகவே, ஏதேனும் செய்யுங்கள் என என்னிடம் கேட்டார்.

இதனையடுத்து, அவர்களை அழைத்துச் சென்ற பஸ்ஸிலுள்ள சி.ஐ.டி. அதிகாரியிடம் இந்த விடயம் உண்மையான எனக் கேட்டேன். அவர் ஆம் என்றார். இதனைத் தொடர்ந்தே இவர்களுக்கு தங்களுக்கான உடைகளை பெற்றுக் கொள்வதற்கான சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுக்குமாறு பொலிஸ் மா அதிபருக்கு தெரிவித்தேன். பின்னர் அவர்களுக்கு தேவையான உடைகளை அவர்களின் உறவினர்களின் ஊடாக பெற்றுக்கொண்டனர். இது தவறா?

எனினும், அரசாங்கத்திற்குள் எனக்கு எதிர்ப்புள்ளதாகக் கூறுவதில் உண்மையில்லை. 14 நாட்களுக்கு தனிமைப்படுத்தலுக்கு அழைத்துச் செல்வோருக்கு மாற்றுவதற்கு உடை இல்லை எனும்போது, அவர்களுக்குத் தேவையான உடைகளையும் அவர்களுக்கான பொருட்களையும் பெற்றுக்கொள்வதற்கு உதவி செய்ததால் அமைச்சுப் பதவியிலிருந்து விலகுமாறு கூற முடியுமா?

அது தவறென்றால் நான் அமைச்சுப் பதவிலிருந்து விலகுகிறேன். ஆடை பெற்றுக் கொள்வதற்கு உதவி செய்தது தவறு என மக்கள் தீர்மானித்தால் அமைச்சுப் பதவியிலிருந்து நான் விலகுவதற்குத் தயாராக இருக்கின்றேன் - என்றார்.

## எதிர்க்கட்சி...

ஆதரவு வழங்குவதற்கு எதிர்க்கட்சியிலுள்ள 15 பேர் இதுவரை இணக்கம் தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில், நாடாளுமன்ற கட்டிடத் தொகுதியில் இடம்பெற்ற எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் குழுக் கூட்டத்திற்கு 32 பேர் மாத்திரமே கலந்துகொண்டிருந்தனர். அதில் ஹரீன் பெர்னாண்டோ வருகை தரவில்லை.

நாடாளுமன்றத்தில் ஒரு எதிர்க்கட்சித் தலைவர் இருக்கும்போது, நாடாளுமன்ற குழுக் கூட்டத்தில் சஜித் பிரேமதாசவே எதிர்க்கட்சித் தலைவர் என்ற யோசனை நிறைவேற்றப்பட்டுள்ளது. அவ்வாறாயின், எதிர்க்கட்சித் தலைவர் மீது நம்பிக்கையில்லை. இதற்கிடையில், ரணில் விக்கிரமசிங்கவிற்கு ஆதரவு தெரிவிப்பதற்கு 10 பேர் இதுவரை அவரை சந்தித்து இணக்கம் தெரிவித்துள்ளனர்.

ஆகவே, அடுத்த நாடாளுமன்ற அமர்வில் எதிர்க்கட்சித் தலைவர் ரணிலா அல்லது சஜித்தா என்பதை உங்களிடம் கேட்க விரும்புகின்றோம். இந்தப் பிரச்சினையை எவ்வாறு தீர்க்கப் போகின்றீர்கள். ரணில் விக்கிரமசிங்கவிற்கு ஆதரவளித்து 10 பேர் இதுவரை இணக்கம் தெரிவித்து கைச்சாத்திட்டுள்ளதுடன், மேலும் பலரும் அவருடன் செல்வதற்கு தயாராகியுள்ளனர்.

அடுத்த நாடாளுமன்ற அமர்வில் ரணில் விக்கிரமசிங்கவே எதிர்க்கட்சித் தலைவராக இருப்பார். அதனை உங்களால் தடுக்க முடியாது. தற்போது, உங்களுடைய உறுப்பினர்கள இரவோடு இரவோடு பேச்சுவார்த்தை நடத்துகின்றனர்.

நாட்டை பற்றி பேசும் உங்களுக்கு தற்போது உங்களுடைய கட்சிக்குள் ஏற்பட்டுள்ள முரண்பாடுகளை தீர்க்க முடியாதுள்ளது – என்றார்.

## சிறுநீரக - புற்று...

மாதத்திற்கு 500 பேர் உயிரிழக்கின்றனர். வருடத்திற்கு 6 ஆயிரம் பேர் உயிரிழக்கின்றனர். ஒரு வருடத்திற்கு ஒரு இலட்சத்து 64 ஆயிரம் பேர் சிறுநீரக நோயால் பாதிக்கப்படுகின்றனர். அதேபோன்று, புற்று நோயினால் வருடத்திற்கு 75 ஆயிரம் பேர் பாதிக்கப்படுகின்றனர்.

ஆகவே, ஒரு வருடத்திற்கு ஒரு இலட்சத்து 64 ஆயிரம் பேர் சிறுநீரக நோயால் பாதிக்கப்படுகிறனர். மாதத்திற்கு 500 பேரும் வருடத்திற்கு 6 ஆயிரம் பேரும் உயிரிழக்கின்றமைக்கும் புற்றுநோயினால் நாளொன்றுக்கு 54 பேர் உயிரிழக்கின்றமைக்கும் வருடத்திற்கு 30 ஆயிரம் பேர் பாதிக்கப்படுகின்றமைக்கும் இந்த இரசாயன உரம் மற்றும் இரசாயன கிருமிநாசினிகளின் பாவனையே காரணம் என விசேட வைத்திய நிபுணர்கள் மற்றும் அது சார்ந்த அனுபவமுள்ள நிபுணர்களும் மக்களை தெளிவுபடுத்தினர்.

நல்லாட்சி அரசாங்கத்தின்போது, விஷமற்ற உணவுகளை தயாரித்தல் என்ற காரியாலம் ஒன்று ஜனாதிபதி செயலகத்தில் இயங்கியது. எனினும், நல்லாட்சியிலுள்ள சிலர் இந்தச் செயற்பாடுகளுக்கு தடையாக இருப்பதாக இதில் அங்கம் வகித்த ரத்தன தேரர் தெரிவித்தார்.

எனவே, அன்று நல்லாட்சியில் இருந்துகொண்டு விஷமற்ற உணவு தயாரிப்பிற்கு எதிர்ப்புத் தெரிவித்தவர்களே இன்று இதற்கும் எதிர்ப்புத் தெரிவிக்கின்றனர். ஆகவே, விவாதத்தை ஆரம்பிக்கும்போது கொரோனா தொற்றுடன் ஆரம்பித்தாலும் இறுதியில் இரசாயன உர இறக்குமதி தடைக்கான யோசனையை நீக்குமாறு கோரியே விவாதத்தை நிறைவுசெய்வார்கள்.

சிறுநீரக நோயாளர்கள் மற்றும் புற்று நோயாளர்களை உருவாக்கும் இரசாயன உர இறக்குமதிக்கு ஆதரவளிக்கும் எதிர்க்கட்சியினால் கொரோனா தொற்று தடுப்பு குறித்தும் தடுப்பூசி வழங்கல் குறித்தும் கேள்வி எழுப்புவதற்கு உரிமையுள்ளதா என்பதையும் வினவ விரும்புகின்றேன்.

இரசாயன உர இறக்குமதிசெய்யும் நிறுவனங்களின் தரகர்களாக எதிர்க்கட்சியினர் உருவாகியுள்ளனர். எனவே, கொரோனாவினால் அரசியல் மாற்றங்கள் எதுவும் ஏற்படாது. கொரோனா தொற்றை சிறப்பாக கட்டுப்படுத்தும் நாடுகளின் நிலைமை ஓரிரு வாரங்களில் மாற்றமடைய முடியும். கொரோனாவினால் பாதிக்கப்பட்ட நாடுகள் ஒருசில வாரங்களில் அதிலிருந்து மீள முடியும் - என்றார்.

## பயங்கரவாத...

1979ஆம் ஆண்டின் 48ஆம் இலக்க பயங்கரவாதத் தடுப்பு தற்காலிக ஏற்பாடுகள் சட்டம் 9ஆம் பிரிவின்கீழ், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவினால் குறித்த வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

இதனூடாக தடுப்புக்காவல் அனுமதியுள்ள காலம்வரையில் கிருலப்பனையிலுள்ள பயங்கரவாத தடுப்பு மற்றும் விசாரணைப் பிரிவிலேயே தடுத்துவைத்திருக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

## அமைச்சரவை தீர்மானங்கள்...

**05. வடமத்திய மாகாணத்தில் பிரதேச செயலக மட்டத்தில் சேதனப் பசளை உற்பத்தி முன்னோடிக் கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்தல்**

விவசாயத்திற்கான இரசாயன உரப்பாவனையை தடைசெய்வதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளமையால், எதிர்வரும் செப்டெம்பர் மாதத்தில் பெரும்போகச்செய்கை ஆரம்பிக்கும்போது சேதனப் பசளை உற்பத்திகளை அதிகரித்து போதுமானளவு விநியோகம் செய்வதற்குப் பொருத்தமான வேலைத்திட்டத்தை மேற்கொள்வது அவசியமாகும். அதற்கமைய, காணி மறுசீரமைப்பு ஆணைக்குழு நிதியத்தின் மூலம் தேவையான அடிப்படை மூலதனத்தை வழங்கி சேதனப் பசளை உற்பத்திக் கருத்திட்டமொன்று நடைமுறைப்படுத்துவதற்கும், அவ்வாறு தயாரிக்கப்படும் சேதனப் பசளையை விவசாய அமைச்சின் மூலம் கொள்வனவுசெய்து விவசாயிகளுக்கு விநியோகிக்கக்கூடிய வகையில் கருத்திட்டமொன்று திட்டமிடப்பட்டுள்ளது. அதிகமாக விவசாய நடவடிக்கைகளை மேற்கொள்ளும் அநுராதபுரம் மற்றும் பொலன்னறுவை மாவட்டங்களில் 29 பிரதேச செயலகப் பிரிவுகளை உள்ளடக்கி தேவையான மூலப்பொருட்களை குறித்த பிரதேசங்களிலேயே வழங்கி, ஒரு பிரதேச செயலகப் பிரிவில் குறைந்தது சேதனப் பசளை உற்பத்தி நிலையமொன்றை தாபித்து, முன்மொழியப்பட்டுள்ள முன்னோடிக் கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக காணி அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**06. எல்பிட்டிய மஹஹீன்தென்ன பிரதேசத்தில் ஏற்றுமதி விவசாய பெறுமதிசேர் அபிவிருத்திக் கைத்தொழில் வலயத்தை நிறுவுதல்**

ஏற்றுமதி விவசாயத்துறையில் பெறுமதிசேர் உற்பத்திகளை அதிகரிப்பதன் மூலம், சந்தை வாய்ப்புகளைப் பெற்றுக்கொள்ளவும், உயர்தர சந்தைகளின் வாய்ப்புகளை அணுகுவதற்கும் இயலுமை காணப்படுவதால், அதன்மூலம் அதிக அந்நிய செலாவணியை எமது நாட்டுக்குக் கொண்டுவருவதற்கும் சந்தர்ப்பம் இருப்பது கண்டறியப்பட்டுள்ளது. அவ்வாறான கருத்திட்டங்களுக்கு வசதிகளை வழங்குவதற்காக எல்பிட்டிய மஹஹீன்தென்ன பிரதேசத்தில் காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவுக்குச் சொந்தமான 64 ஏக்கர் காணியில் ஏற்றுமதி விவசாய பெறுமதிசேர் அபிவிருத்திக் கைத்தொழில் வலயத்தை நிறுவுவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

அதற்கமைய, குறித்த கருத்திட்டத்தின் முதற்கட்டமாக தற்போது நடைமுறைப்படுத்தப் பட்டுவரும் விவசாய நவீனமயப்படுத்தல் கருத்திட்டத்தின்கீழ் வியாபார சாத்தியவள மதிப்பீட்டை மேற்கொண்டு, அடையாளங்காணப்பட்டுள்ள 14 தொழில் முயற்சியாளர்களுக்கு கருத்திட்டத்தின் ஆரம்பத்தில் காணித்துண்டுகளைப் பெற்றுக்கொடுப்பதற்கும், கருத்திட்டத்தின் இரண்டாம் கட்டத்தின்கீழ் விவசாய தொழில் முயற்சியாளர்களைத் தெரிவு செய்வதற்காக இராஜாங்க அமைச்சின் செயலாளரின் தலைமையில் குழுவொன்றை நியமிப்பதற்கும் பெருந்தோட்டத்துறை அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**07. இலங்கை பிணைமுறிகள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுச் சட்டமூலம்**

இலங்கை பிணைமுறிகள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுச் சட்டமூலத்தை தயாரிப்பதற்காக 2020 ஒக்ரோபர் மாதம் 26ஆம் திகதி இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கீகாரம் கிடைத்துள்ளது. அதற்கமைய, சட்ட வரைஞரால் தயாரிக்கப்பட்டுள்ள சட்டமூலத்திற்கு சட்ட மா அதிபரின் ஒப்புதல் கிடைக்கப்பெற்றுள்ளது. அதற்கமைய, குறித்த சட்டமூலத்தை அரச வர்த்தமானியில் வெளியிடுவதற்கும், பின்னர் நாடாளுமன்ற அங்கீகாரத்திற்காக சமர்ப்பிப்பதற்கும் நிதி அமைச்சராக பிரதமர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**08. 1979ஆம் ஆண்டு 40ஆம் இலக்க ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டத்தின்கீழ் வெளியிடப்பட்டுள்ள கட்டளைகள்**

தரை ஓடுகள் (டயில்) மற்றும் குளியலறை செரமிக் உபகரணங்களை இறக்குமதிசெய்யும் போது அறிவிடப்படும் செஸ் வரியை திருத்தம் செய்வதற்காக 1979ஆம் ஆண்டு 40ஆம் இலக்க ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டத்தின்கீழ் கட்டளைகள் விதிக்கப்பட்டுள்ளன. குறித்த கட்டளைகள் 2219/15 மற்றும் 2021 மார்ச் மாதம் 15ஆம் திகதிய விசேட வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்டுள்ளதுடன், குறித்த சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் கட்டளைகளின் அங்கீகாரத்திற்காக நாடாளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்காக வர்த்தக அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**09. புதிய களனிப் பாலத்திலிருந்து அத்துருகிரிய வரையான நான்கு வழிப்பாதைகளுடன் கூடிய தூண்களிலான அதிவேக நெடுஞ்சாலை நிர்மாணிப் பின்போது பாதிக்கப்படும் குடும்பங்களுக்கு வீடுகளை வழங்கல்**

புதிய களனிப் பாலத்திலிருந்து அத்துருகிரிய வரையான நான்கு வழிப்பாதைகளுடன் கூடிய தூண்களிலான அதிவேக நெடுஞ்சாலை அமைக்கும் கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்துள்ளது. குறித்த கருத்திட்டத்திற்காக கையகப்படுத்தப்பட்டுள்ள சட்டவிரோத வதிவிடக் குடும்பங்கள், சட்ட விரோத வதிவிட உப குடும்பங்கள் மற்றும் 06 பேர்ச்சஸ்களுக்குக் குறைவான காணிகளில் வசிக்கும் குடும்பங்கள் மற்றும் தெமட்டகொட விளையாட்டரங்குக்காக ஒதுக்கப்பட்டுள்ள காணியில் சட்டவிரோதமாக வசிக்கும் குடும்பங்கள் உள்ளிட்ட 1,100 குடும்பங்களுக்காக மாற்று வீட்டு வசதிகளை வழங்கும் தேவை கண்டறியப்பட்டுள்ளது. அதற்கமைய, நகர அபிவிருத்தி அதிகாரசபை மூலம் நடைமுறைப்படுத்தப்படும் கொலன்னாவ, ஹேனமுல்ல மற்றும் மாளிகாவத்த போன்ற வீடமைப்புத் திட்டங்களில் குறித்த 1,100 குடும்பங்களுக்கான வீடுகளை வழங்குவதற்காக நெடுஞ்சாலைகள் அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**10. துறைமுகத்தால் விடுவிக்கப்படாததும் இலங்கை சுங்கத் திணைக்களத்தால் அரச உடைமையாக்கப்பட்டதுமான அத்தியாவசிய உணவுப் பொருட்களை லங்கா சதொச நிறுவனத்தின் மூலம் மானிய விலையில் மக்களுக்கு விற்பனை செய்தல்**

நிலவும் கொவிட்-19 தொற்று நிலைமையால் பொதுமக்களுக்கு அத்தியாவசியப் பொருட்களை சலுகை விலையில் பற்றாக்குறையின்றி விநியோகிக்கும் பொறிமுறையொன்று தற்போது லங்கா சதொச நிறுவனத்தால் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. குறித்த பொறிமுறையை தொடர்ந்தும் மேற்கொண்டு செல்வதற்கு இயலுமான வகையில் இலங்கை துறைமுக அதிகாரசபை மற்றும் இலங்கை சுங்கத்தால் அரச உடைமையாக்கப்பட்ட அத்தியாவசிய உணவுப்பொருட்களை லங்கா சதொச நிறுவனத்திற்கு பெற்றுக்கொடுப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக வர்த்தக அமைச்சரும் துறைமுகங்கள் கப்பல்துறை அமைச்சரும் கூட்டாக சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**11. கொவிட்-19 பயணத்தடை விதிக்கப்பட்டுள்ள காலப்பகுதியில் விவசாயிகளுக்கு விற்பனை செய்ய இயலாமல்போகும் மேலதிக தொகையான மரக்கறிகள் மற்றும் பழவகைகளை அரசாங்கத்தால் கொள்வனவுசெய்து விநியோகித்தல்**

அரசாங்கத்தால் நாடளாவிய ரீதியில் விதிக்கப்பட்டுள்ள பயணத்தடையால் தங்களது உற்பத்திகளை குறிப்பாக, மரக்கறிகள் மற்றும் பழவகைகளை வழக்கமான முறையில் போக்குவரத்துச் செய்யவும் விற்பனை செய்யவும் இயலாமையால் அழிவடைந்துபோகும் நிலையில், சிறிய மற்றும் நடுத்தர அதேபோல் பாரிய விவசாயிகள் பெரும் பொருளாதார பிரச்சினைக்கு முகங்கொடுத்து வருகின்றமை தெரியவந்துள்ளது.

மேலும், நுகர்வோர் நியாய விலையில் தரமான மரக்கறிகள் மற்றும் பழவகைகளைப் பெற்றுக் கொள்வதில் சிரமங்களை எதிர்கொண்டுள்ளனர். அதற்கமைய, பயணத்தடை விதிக்கப்பட்டுள்ள சூழலில் விற்பனை செய்ய இயலாத தொகையான மரக்கறிகள் மற்றும் பழவகைகளை மாவட்ட விலைமனுக் குழுவின் விலையின் அடிப்படையில் மாவட்ட செயலா ளர்கள், அரசாங்க அதிபர்கள் மூலம் கொள்வனவு செய்வதற்கும், அவ்வாறு கொள்வனவு செய்யப்பட்ட தொகையான மரக்கறிகள் மற்றும் பழவகைகளை பயணத்தடை முடிவுறும்வரை கொவிட் சிகிச்சை நிலையங்களுக்கும், அனைத்து அரச மருத்துவ மனைகளுக்கும், முப்படையினர் மற்றும் இடம் பெயர்ந்துள்ள இடைத்தங்கல் முகாம்களுக்கும், வாழ்வாதாரத்தை இழந்த குடும்பங்களுக்கும் தேவைக்கேற்ப இலவசமாக வழங்குவதற்கான வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக விவசாய அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

# முல்லைத்தீவு - உப்புமாவெளி பகுதியில் சட்டவிரோத மணல் அகழ்வு!

## - யாழ். ஆயர் இல்லமே முழுப்பொறுப்பையும் ஏற்கவேண்டும் என்று இளஞ்செழியன் சுட்டிக்காட்டு





(வன்னி செய்தியாளர்)

நாட்டில் பயணத்தடை விதிக்கப்பட்டு மக்கள் முடங்கியுள்ள நிலையில், முல்லைத்தீவு மாவட்டத்தின் கரைதுறைப்பற்று பிரதேச செயலாளர் பிரிவில் அமைந்துள்ள உப்புமாவெளி பிரதேசத்தில் சட்டவிரோத மணல் அகழ்வு இடம்பெற்று வருகின்றது. இதற்கு முற்றுமுழுதான பொறுப்பை யாழ்ப்பாணம் ஆயர் இல்லம் ஏற்க வேண்டும் என்றும் சட்டத்திற்கு புறம்பான இந்த நடவடிக்கை உடனடியாக நிறுத்தப்படவேண்டும் என்றும் தமிழரசுக் கட்சியின் முக்கியஸ்தர் பீற்றர் இளஞ்செழியன் தெரிவித்தார்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் கரைதுறைப்பற்று பிரதேச செயலாளர் பிரிவில் அமைந்துள்ள உப்புமாவெளி பிரதேசத்தில் யாழ். ஆயர் இல்ல காணியில் சட்டவிரோதமாக பாரிய அளவிலான மணல் அகழ்வு இடம்பெறுவதாக ஊடகங்களில் செய்தி வெளியிடப்பட்ட நிலையில் குறித்த விடயம் தொடர்பில் ஆராய சம்பவ இடத்தை கடந்த 06ஆம் திகதி சென்று பார்வையிட்டிருந்தார்.

அதன்பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே இதனைக் குறிப்பிட்டார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

உப்புமாவெளி பிரதேசத்தில் 5 ஆயிரம் ரிப்பர்களில் ஏற்றக்கூடிய மண் குவியல் குவிக்கப்பட்டுள்ளது. இது ஆயர் இல்லத்திற்கு சொந்தமான காணி என்று சொல்ல முடியும். தற்போது ஆயர் இல்ல காணியில் இரண்டு வகையான மணல் அகழ்வுகள் நடைபெறுகின்றன

ஒன்று அனுமதிபெற்றும் மற்றையது அனுமதி அற்ற முறையிலும் நடக்கின்றன. இது குறித்து ஆயர் இல்லத்தினர் வெளிப்படையாக அறிவிக்கவேண்டும்

சட்டவிரோதமான இந்த நடவடிக்கை குறித்து மாவட்டத்தில் இருக்கக்கூடிய இராணுவத்தினர், பொலிஸார், தகுதி வாய்ந்த அதிகாரிகள் பலர் இருந்தும் இதனை தடைசெய்ய முடியாமல் இருப்பதற்குக் காரணம் என்ன? அவர்களும் இவர்களுடன் சேர்ந்து கையூட்டல் பெற்று அனுமதி வழங்கியுள்ளார்களா?

இது குறித்து அனைத்துத் தரப்பினரும் பதில் கொடுக்கவேண்டும். குறிப்பாக யாழ். ஆயர் இல்லம் இதற்கு பதிலளிக்கவேண்டும.; இது யாருடைய காணி, எதற்காக இந்த மண் குவிக்கப்பட்டுள்ளது. யாழ் ஆயர் இல்லம்தான் இந்த மண்ணை விற்கின்றதா?

சட்டவிரோத மணல் குவிக்கப்பட்டுள்ள குறித்த காணியில் இன்னொரு பகுதியில் சட்டபூர்வ மணல் அகழ்வு ஒன்றும் இடம்பெறுகிறது. ஆனால், கடந்த மூன்று ஆண்டுகளுக்கு மேல் மக்கள் எதிர்ப்பைத் தெரிவித்தும் இதுவரை நிறுத்தப்படவில்லை. தற்போதும் ஆயர் இல்லத்திற்கு பத்து இலட்சம் பணம் சென்றுள்ளதாக அறிகின்றேன்.

நாட்டில் மக்கள் பயணத்தடையினால் முடக்கப்பட்ட நிலையில் இந்த மணல் குவிப்பு இடம்பெற்றுள்ளது. இதற்கு முற்றுமுழுதான பொறுப்பு ஆயர் இல்லம்தான் சொல்ல வேண்டும். சட்ட ரீதியான மணல் அகழ்வும் இடம்பெறுகின்றது. சட்டத்திற்கு புறம்பான மணல் அகழ்வும் இடம்பெறுகின்றது. விரைவில் இது நிறுத்தப்படவேண்டும் என்றும் தெரிவித்தார்.

இதேவேளை, சட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டியவர்கள் ஏன் இதுவரை எந்தவிதமான நடவடிக்கைகளும் எடுக்கவில்லை? உடனடியாக உரிய சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்பதையும் கேட்டுக்கொள்கிறேன் - என்றார்.

### ஐவர் பங்குபற்றுதலுடன்...

## பூதன்வயல் - வேம்படி நாகதம்பிரான் ஆலய வருடாந்த பொங்கல் விழா





(முல்லைத்தீவு நிருபர்)

முல்லைத்தீவு - பூதன்வயல் பகுதியில் அமைந்துள்ள அருள்மிகு வேம்படி நாகதம்பிரான் ஆலயத்தின் வருடாந்த பொங்கல் விழாவானது நேற்று முன்தினம் ஐவரின் பங்குபற்றுதலுடன் இடம்பெற்றது.

குறிப்பாக, இந்த ஆலயத்தின் வருடாந்த பொங்கல் விழாவில் வருடாவருடம் பெருந்திரளான பக்தர்கள் கலந்துகொள்வதுடன், அவ்வாறு ஆலயத்திற்கு வருகின்ற பக்தர்கள் காவடி, பாற்செம்பு, தூக்குக்காவடி, தீக்காவடி உள்ளிட்ட நேர்த்திக்கடன்களையும் மேற்கொள்வார்கள்.

இவ்வாறாக மிகச் சிறப்பான முறையில் பொங்கல் வழிபாடுகள் இடம்பெறும்.

இந்நிலையில், தற்போதுள்ள கொவிட் - 19 அசாதாரண சூழ்நிலையைக் கருத்திற்கொண்டு, இவ்வருட பொங்கல் விழாவானது ஐந்து பேரின் பங்குபற்றுதலுடன், சுகாதார வழிமுறைகள் பின்பற்றப்பட்டு அமைதியான முறையில் இடம்பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.



உலக சுற்றாடல் தினத்தை முன்னிட்டு வைத்தியசாலையின் சுகாதார சேவையாளர்களுக்கிடையே நடத்திய சித்திரக் கண்காட்சி, மரம் நடுதல், சுற்றாடல் தொடர்பான விழிப்புணர்வு நிகழ்வு அஷ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலையின் ஏற்பாட்டில் வைத்தியசாலையின் அத்தியட்சகர் ஏ.எல்.எவ்.ரஹ்மான் தலைமையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் பிரதம அதிதியாகக் இலங்கை வை.எம்.எம்.ஏ. பேரவையின் தேசிய தலைவர் சஹீட் எம். ரஸ்மி உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

(படங்கள் - இக்பால் அலி)

## மண்சரிவு ஆபத்து இடங்களைப் புனரமைக்க நடவடிக்கை





(ஏ.ஏ.எம்.பாயிஸ்)

கலவான அயகம பிரதேசத்தில் இடம்பெற்ற மண்சரிவு வெள்ள அனர்த்தங்களையடுத்து இப்பிரதேசத்தில் ஏற்பட்டுள்ள மண்சரிவு மற்றும் வீதி தாழிறக்கம், வெடிப்புகள் தொடர்பில் இவற்றைப் புனரமைக்க சிறு பெருந்தோட்டப் பயிர்ச்செய்கை அபிவிருத்தி மற்றும் அதுசார்ந்த கைத்தொழில்கள் மற்றும் ஏற்றுமதி மேம்பாட்டு இராஜாங்க அமைச்சர் ஜானக வக்கும்புர நடவடிக்கை மேற்கொண்டுள்ளார்.

இதற்கிணங்க இப்பிரதேச தும்பர எல்ல வீதியின் ஒருபகுதியும் தும்பர வைத்தியசாலைக்குச் செல்லும் வீதியின் ஒரு பகுதியும் வெடிப்புகள் ஏற்பட்டு வீதி தாழிறங்கியுள்ளது.

இந்நிலைமைகளைச் சீர்செய்ய அதிகாரிகளுக்குப் பணிப்புரை விடுத்ததையடுத்து தேசிய கட்டிடப் பரிசோதனை அமைப்பின் அதிகாரிகள் இப்பகுதியில் பரிசீலனைகளை மேற்கொண்டு இவ்வீதிகளைத் துரிதமாகப் புனரமைக்க ஏற்பாடுகளைச் செய்துள்ளனர்.

## தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறிய ஆயிரம் பேர் கைது

நாட்டில் நேற்றுக் காலை வரையான 24 மணிநேரத்தில் தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறிய ஆயிரத்து 28 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் பிரதி பொலிஸ் மா அதிபருமான அஜித் ரோஹண தெரிவித்தார்.

மாத்தளை பிரதேசத்திலேயே அதிகளவானோர் கைதுசெய்யப்பட்டுள்ளதாகவும் அந்த பிரதேசத்தில் மாத்திரம் 158 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் சுட்டிக்காட்டினார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

இதேவேளை, கண்டி பிரதேசத்தில் 108 பேரும், நிக்கவெரட்டிய பிரதேசத்தில் 93 பேரும் கைதுசெய்யப்பட்டுள்ளனர். கடந்த ஒக்டோபர் மாதம் முதல் இதுவரையில் தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறிய 25 ஆயிரத்து 886 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

முகக்கவசம் அணியாமை மற்றும் சமூக இடைவெளியை பேணாமை ஆகிய விடயங்கள் தொடர்பிலேயே இவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

அதற்கமைய அத்தியாவசிய சேவையின்றி கொழும்புக்குள் நுழைய முயற்சித்த 976 வாகனங்கள் நேற்று மீண்டும் திருப்பி அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக சுட்டிக்காட்டினார்.

## தனிமைப்படுத்தலுக்கு ஆட்களை ஏற்றிச்சென்ற பஸ் விபத்து





வவுனியா ஓமந்தை பனிக்கன் நீராவிப் பகுதியில் தனிமைப்படுத்தலுக்கு ஆட்களை ஏற்றிச்சென்ற பஸ்ஸொன்று நேற்று அதிகாலை விபத்திற்குள்ளாகியது.

இந்த பஸ் வெளிநாடுகளிலிருந்து நாடு திரும்பிய பயணிகளை அழைத்துக்கொண்டு கிளிநொச்சி பூநகரி தனிமைப்படுத்தல் நிலையம் நோக்கி சென்றுகொண்டிருந்தது.

இதன்போது ஓமந்தை பனிக்கன் நீராவிப் பகுதியில் வீதிக்கரையில் நிறுத்திவைக்கப்பட்டிருந்த கனரக வாகனத்துடன் மோதியதில் விபத்திற்குள்ளாகியது.

பஸ்ஸில் 7 பேர் பயணம் செய்த நிலையில் எவருக்கும் காயங்கள் ஏற்படவில்லை என தெரிவிக்கப்படுகின்றது. விபத்து தொடர்பாக ஓமந்தை பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

## தியகம மலர்ச்சாலையொன்றின் முகாமையாளர் உள்ளிட்ட 7 பேருக்கு கொரோனா தொற்று உறுதி

ஹோமாகமையின் பல்நோக்கு கூட்டுறவுச் சங்கத்துக்கு சொந்தமான தியகம மலர்ச்சாலையின் முகாமையாளர் உள்ளிட்ட 7 பேருக்கு கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளதால் அந்த மலர்ச்சாலையை தற்காலிகமாக மூடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக கஹதுடுவ பொதுச் சுகாதார பரிசோதகர் பீ.சமரசேகர தெரிவித்துள்ளார்.

இதன் காரணமாக அந்த மலர்ச்சாலையில் பணியாற்றிய இருவர் மலர்ச்சாலையிலேயே தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

சில தினங்களுக்கு முன்னர் இந்த மலர்ச்சாலையின் முகாமையாளருக்கும் சாரதிக்கும் கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டிருந்த நிலையில், அவர்களுடன் தொடர்பை பேணியவர்களுக்கு மேற்கொள்ளப்பட்ட பி.சிஆர். பரிசோதனையில் அந்த மலர்ச்சாலையில் பணியாற்றிய மேலும் 5 பணியாளர்களுக்கு தொற்று உறுதிப்படுத்தப்பட்டிருந்தது. அதற்கமைய மலர்ச்சாலையில் பணியாற்றிய சிற்றூழியர்கள் 10 பேர் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளதுடன் நோயாளர்களை வைத்தியசாலைக்கு அனுப்பிவைக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இந்த மலர்ச்சாலையில் பணியாற்றிய சகல ஊழியர்களும் ஒரே பாதுகாப்பு உடைகளை அணிந்து சேவையாற்றியுள்ளதுடன் தினந்தோறும் இடம்பெறும் மரணச் சடங்குகளை மேற்கொண்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் அந்த முகாமையாளருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

## இம்மாதத்துக்கான ஓய்வூதிய கொடுப்பனவுகள் நாளை

ஓய்வூதியம் பெறுபவர்களுக்கான இம்மாத கொடுப்பனவுகளை நாளைய தினம் மற்றும் நாளை மறுதினத்தில் வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதற்கமைய இந்த ஓய்வூதிய கொர்டுப்பனவு வழங்கப்படும் தினத்தன்று ஓய்வூதியம் பெறுபவர்களை சம்பந்தப்பட்ட வங்கிகளுக்கு அழைத்துச்செல்ல தேவையான போக்குவரத்து வசதிகளை வழங்குவதற்கு இராணுவத்தினர் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

கிராமசேவை உத்தியோகத்தர் மற்றும் பிரதேச செயலாளர்களின் ஒத்துழைப்புடன் அந்தப் போக்குவரத்து வசதிகளை வழங்கும் நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு இராணுவத் தளபதி ஜெனரல் ஷவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

அதற்கமைய ஓய்வூதியம் வழங்கும் நடவடிக்கைகளை முன்னெடுக்கும் வங்கிகள் அன்றைய தினம் திறந்திருக்கும் என்றும் இராணுவத் தளபதி தெரிவித்துள்ளார்.

## பலாங்கொடை பிரதேசத்தில் 17 கொரோனா மரணங்கள்

(ஏ.ஏ.எம்.பாயிஸ்)

கொரோனா தொற்று பரவலின் காரணமாக பலாங்கொடை பிரதேசத்தில் ஏற்பட்டுள்ள மரணங்களின் எண்ணிக்கை 17 ஆக உயர்ந்துள்ளது.

அத்துடன், கொரோனா தொற்று நோயால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கையும் 292 ஆக உயர்ந்துள்ளதாக பலாங்கொடை பொதுச் சுகாதார பரிசோதகர்கள் நேற்று தெரிவித்தனர்.

இதேவேளை, தமிழ் - சிங்களப் புத்தாண்டையடுத்து பலாங்கொடை பிரதேசத்தில் 102 குடும்பங்களைச் சேர்ந்த 445 பேருக்குத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளதுடன், பலாங்கொடை மற்றும் காவத்தை கொரோனா சிகிச்சை மத்திய நிலையங்களில் 152 பேர் சிகிச்சைபெற்று வருவதாகவும் அவர்கள் சுட்டிக்காட்டினார்கள்.



குருநாகல் மாவட்ட ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி அமைப்பாளரும் இப்பாகமுவ பிரதேச சபை உறுப்பினருமான எம்.எஸ்.எம். பாஹிமினால் கொரோனா தொற்றினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உலருணவுப் பொதிகள் வழங்கப்பட்டன.

(படம் - இக்பால் அலி)

## ஆடைத் தொழிற்சாலை பரவலால் இரண்டு மாதக் குழந்தைக்கு தொற்று

(கிளிநொச்சி நிருபர்)

கிளிநொச்சி கண்டாவளை சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் தர்மபுரம் கிராமத்தைச் சேர்ந்த இரண்டு மாதக் குழந்தைக்கு தொற்று ஏற்பட்டுள்ளமை நேற்று முன்தினம் மேற்கொள்ளப்பட்ட அன்ரிஜன் பரிசோதனையில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

குறித்த குழந்தையின் தந்தை கிளிநொச்சியிலுள்ள ஆடைத் தொழிற்சாலை ஒன்றில் பணியாற்றுபவர் என்றும் அவருக்கு தொற்று உறுதிசெய்யப்பட்டதைத் தொடர்ந்து அவரது மனைவி மற்றும் இரண்டு மாதக் குழந்தைக்கு அன்ரிஜன் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது. இதில் குழந்தைக்கு கொரோனா தொற்று இருப்பது உறுதிசெய்யப்பட்டது. தாய்க்கு அன்ரிஜன் பரிசோதனையில் தொற்று இல்லை என முடிவு வந்தபோதும் அவருக்கு இருக்கும் அறிகுறிகள் தொற்றுக்கான வாய்ப்புகள் அதிகம் இருப்பதனால் பிசிஆர் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதேவேளை, நேற்று முன்தினம் கிளிநொச்சி ஆடைத் தொழிற்சாலை ஒன்றில் 14 பேருக்கு மேற்கொள்ளப்பட்ட அன்ரிஜன் பரிசோதனையில் ஏழு பேருக்கு தொற்று இருப்பது உறுதிசெய்யப்பட்டுள்ளது.

## தனிமைப்படுத்தலிலிருந்து இரு பகுதிகள் விடுவிப்பு

(தலவாக்கலை)

தேயிலை ஆராய்ச்சி நிறுவன வளாகம் மற்றும் சென்கூம்ஸ் கிராமசேவகர் பிரிவு ஆகியவற்றை நேற்றுமுதல் தனிமைப்படுத்தலிலிருந்து விடுவிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக லிந்துலை சுகாதார வைத்திய அதிகாரி ஜனாத் அபேகுணரத்ன தெரிவித்தார்.

கொரோனா வைரஸ் பரவல் காரணமாக கடந்த மாதம் 8ஆம் திகதிமுதல் தனிமைப்படுத்தப்பட்டிருந்த தலவாக்கலை தேயிலை ஆராய்ச்சி நிறுவன வளாகமும் சென்கூம்ஸ் கிராமசேவகர் பிரிவும் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

அதன்படி இவ்விரு பகுதிகளும் நேற்று செவ்வாய்க்கிழமை முதல் விடுவிக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் சுட்டிக்காட்டினார்.

## கப்பம் கோரிய விமானப்படை சிப்பாய்கள் மூவர் கைது

கற்பிட்டி, கல்குடா பிரதேசத்தில் முச்சக்கர வண்டியில் பயணித்துக் கொண்டிருந்த வர்த்தகர்கள் இருவரிடம் ஒரு இலட்சம் ரூபா கப்பம் கோரி பணத்தை கொள்ளையடிக்க முயற்சித்த சம்பவம் தொடர்பில் விமானப்படையின் சிப்பாய்கள் மூவர் கைதுசெய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் பிரதி பொலிஸ் மா அதிபருமான அஜித் ரோஹண தெரிவித்தார்.

பாலாவி துணைப் பிரிவில் பணியாற்றிவந்த விமானப்படை சிப்பாய்கள் மூவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் கடந்த 6ஆம் திகதி கெப் ரக வாகனத்தில் குறித்த முச்சக்கரவண்டியை பின்தொடர்ந்து சென்று இவ்வாறு ஒரு இலட்சம் ரூபா பணத்தைக் கோரி பணத்தை கொள்ளையடிக்க முயற்சித்ததாக கல்பிட்டி பொலிஸாரிடம் முன்வைக்கப்பட்ட முறைப்பாட்டுக்கமைய இவர்கள் மூவரும் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இலங்கைக் கடலில் தீக்கிரையான எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் தொடர்பான விசாரணை நிறைவடையும்வரை கப்பலுக்கு பாதுகாப்பு வழங்குமாறு நீதிமன்றம் கடற்படைக்கு உத்தரவிட்டுள்ளது.

கடலில் கப்பல் மூழ்கியதால் ஏற்பட்டுள்ள பாதிப்புகள் குறித்து ஆராய்வதற்காக ஐந்து குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன.

கப்பலின் வீடியோ தரவு பதிவகத்தையும் விசாரணைக்காக குற்றப்புலனாய்வுத் திணைக்களம் பெற்றுள்ளது. இந்த விசாரணை நிறைவடையும்வரை கப்பலுக்கு பாதுகாப்பு வழங்குமாறு நீதிமன்றம் கடற்படைக்கு உத்தரவிட்டுள்ளது.

இதேவேளை, இந்தக் கப்பல் தீவிபத்துக்குள்ளாகி கடலுக்குள் மூழ்கியதால் நாட்டுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்புகள் மற்றும் அதற்கான இழப்பீடுகளை பெற்றுக்கொள்வது தொடர்பான விசேட கலந்துரையாடலொன்றும் நீதி அமைச்சில் இடம்பெற்றுள்ளது.

எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் தீப்பிடிப்பதற்கு பத்து நாட்களுக்கு முன்னரே கொள்கலனில் கசிவு ஏற்பட்டமை குறித்து கப்பலின் கப்டனுக்கும் மாலுமிகளுக்கும் தெரிந்திருந்தது என சட்ட மா அதிபர் திணைக்களம் நீதிமன்றில் தெரிவித்திருந்தது.

கப்பல் கப்டனுக்கும் மாலுமிகளுக்கும் நைட்ரிக் அசிட் கொள்கலனிலிருந்து கசிவது தெரிந்திருந்தது என சட்ட மா அதிபர் திணைக்களம் தெரிவித்துள்ளது. கப்டன் இலங்கையிலுள்ள தனது முகவருக்கு மின்னஞ்சல் மூலம் இதனை அறிவித்திருந்தார் என பிரதி சொலிசிட்டர் ஜெனரல் மாதவ தென்னக்கோன் தெரிவித்துள்ளார். இலங்கை முகவர் அந்த மின்னஞ்சலை அழித்துள்ளார் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

உள்ளூர் முகவர் மே 19ஆம் திகதி கொழும்பு துறைமுகத்துக்கு கப்பலை அனுமதிக்குமாறு கேட்டுக்கொண்டுள்ளார் எனவும் தெரிவித்துள்ள அவர், 20ஆம் திகதியே இலங்கை அதிகாரிகளுக்கு நைட்ரிக் அசிட் கசிவு குறித்து தெரிவிக்கப்பட்டது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இரசாயன கசிவுக்குள்ளான கப்பலின் பாதிப்புகள் மழை நின்றாலும் தூவானம் விடாத கதையாக தொடர்ந்துகொண்டிருக்கின்றன. நேற்றுமுன்தினம் கொஸ்கொட கரையோரம் ஆமைகள், மீன்கள் இறந்த நிலையில் ஒதுங்கியதைக் காணமுடிந்தது. கரையை தொடாமலேயே இன்னும் எத்தனை உயிர்கள் கடலுக்குள் கரைந்துபோனதோ தெரியவில்லை. கப்பலின் கப்டன் மன்னிப்புக் கேட்டாலும், சம்பந்தப்பட்ட கப்பல் பெருந்தொகையில் நட்டஈட்டை கொடுத்தாலும் கடல் வாழ் உயிரினங்களுக்கு ஏற்பட்ட சேதங்களையும், கடல்வளத்திற்கு ஏற்பட்ட பாதிப்புகளையும் அவற்றால் ஈடுசெய்யமுடியுமா? இரசாயனங்கள், எண்ணெய் வகைகள் கலப்பதால் உலகளவில் கடலுக்கு பாதிப்பு ஏற்படுகிறது. கடல் என்பது முழு உலகத்திற்கும் சொந்தமானது.

உலகிலுள்ள மொத்த நீரின் அளவில் 97 சதவீதம் கடல்நீராகும். குடிப்பதற்கு உகந்த தன்மையற்றபோதிலும், கடல்நீரில் ஏராளமான உயிரினங்கள் வாழ்ந்து வருகின்றன. கடல் பகுதியானது முக்கியத்துவம் வாய்ந்ததாக அமைந்துள்ள நிலையில், அதன் சுற்றுச்சூழல் பாதுகாப்புக்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியதும் அவசியமாகியுள்ளது.

தமிழன்
THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்
இல. 91. விஜேராம மாவத்தை. கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42.
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 077 172 1880
மின்னஞ்சல் : thamilannews@yahoo.com/ thamilaneditor@gmail.com
2021, ஜூன் 09ஆம் திகதி, புதன்கிழமை

## கடல் வளத்தைக் காப்போம்!

ஆனால், கடல் மற்றும் கடலோரச் சூழல் மாசடைவது அதிகரித்துள்ளது. பூமியின் குப்பைத்தொட்டிபோல் கடல் பயன்படுத்தப்படுகிறது. கடலில் ஏராளமான கழிவுநீர் கலக்கின்றது. கடலோர நகரங்களில் வசிக்கும் குடியிருப்புகளிலிருந்து வெளியேறும் கழிவுநீர், இரசாயனத் தன்மை மற்றும் நச்சுத்தன்மை கொண்ட கழிவுநீர் போன்றவை கடலில் கலக்கும்படி விடப்படுகின்றன.

கடலுக்கு விடப்படும் சுத்திகரிக்கப்பட்ட கழிவுநீர், வாய்க்கால்கள் வழியே செல்லும்போது அவற்றில் வீசப்படும் குப்பைகளும் கடலை சென்றடைகின்றன. இவ்வாறு சேரும் குப்பைகள் கடல் முழுவதும் பரவுகின்றன. குறிப்பாக, பிளாஸ்ரிடிக், பொலித்தீன் பொருட்கள் அதிகளவில் கடலில் கலக்கின்றன. இவை காற்றில் பறந்துசென்று கடலில் சேர்கின்றன. இதுபோன்ற குப்பைகளை கடல்வாழ் உயிரினங்கள் உண்கின்றன.

இதில் பாதிப்படையும் மீன், ஆமை உள்ளிட்ட கடல்வாழ் உயிரினங்களும், வேறுசில அரியவகை உயிரினங்களும் இறக்கின்றன.

சரக்குக் கப்பல் போக்குவரத்தின்போது அவற்றிலிருந்து கசியும் நச்சுப்பொருட்களாலும் கடல் சூழல் மாசடைகிறது. நிலக்கரி, மசகு எண்ணெய் போன்றவற்றை ஏற்றிச்செல்லும் கப்பல்களிலிருந்து அவை கடலில் கொட்டியபடி செல்வதும், கசிவதும் நிகழ்கின்றது. இவற்றால் கடல்நீர் அதிகளவில் மாசடைகிறது.

உலகளவில் ஒவ்வோர் ஆண்டும் 706 மில்லியன் கலன் எண்ணெய் கடலில் கலப்பதாக ஓர் அறிக்கை தெரிவிக்கிறது. இவற்றில் 50 வீதம் கரைகளில் ஒதுங்குகிறது. முதலில் கடலின் மேல்மட்டத்தில் பரவும் எண்ணெய் படலம், சில மணிநேரங்களில் ஒரு குறிப்பிட்ட ஆழத்துக்குப் பரவி, கடல்நீரின் அடர்த்தியையும், தன்மையையும் மாற்றி விடுகிறது.

கடலில் பரவும் எண்ணெய் படலத்தால் சூரிய ஒளி கடலின் கீழ்பரப்புக்குச் செல்ல முடியாமல் தடுக்கப்படுகிறது. இரசாயனத் தன்மைகொண்ட எண்ணெய் படலம், கடலில் கலக்கும்போது அதன் விஷத்தன்மை பல்வேறு கடல்வாழ் உயிரினங்களைத் தாக்குகிறது. இந்த எண்ணெய்ப் படலம், அலைகள், நீரோட்டம், காற்று வீசும் திசை ஆகியவற்றைப் பொருத்து பரவுகின்றது. கரையில் ஒதுங்கும் எண்ணெய்ப் படலத்தால் அங்கு வாழும் உயிரினங்கள் பாதிக்கப்படுகின்றன.

மேலும், கடற்கரையிலுள்ள மணல் பாறை, தாவரங்கள் போன்றவற்றில் இந்த எண்ணெய்ப் படலங்கள் உறைந்துபோவதால் பல்வேறு சுற்றுச்சூழல் பாதிப்புகள் ஏற்படும் என சூழலியல் வல்லுநர்கள் கூறுகின்றனர்.

கப்பல்களிலிருந்து கசியும் எண்ணெய் மற்றும் இரசாயன திரவங்களால் ஏராளமான கடல்வாழ் உயிரினங்கள் பாதிக்கப் படுவதுடன், சில உயிரினங்கள் அழியவும் நேரிடுகிறது.

கடலில் மேற்கொள்ளப்படும் எண்ணெய் சுத்திகரிப்புப் பணியின் போதும் மாசு ஏற்படுகிறது. கடந்த சில ஆண்டுகளுக்கு முன் மெக்ஸிக்கோ வளைகுடா கடல் பகுதியில் மசகு எண்ணெய் சுத்திகரிப்புப் பணியின்போது ஏற்பட்ட கோளாறு காரணமாக கடலில் பெரும் எண்ணெய்க் கசிவு ஏற்பட்டது. பல நாட்களுக்குத் தொடர்ந்த இந்த எண்ணெய்க் கசிவைக் கட்டுப்படுத்த வல்லுநர்கள் கடுமையாகப் போராடவேண்டிய நிலை ஏற்பட்டது. அப்போது ஏராளமான கடல்வாழ் உயிரினங்கள் இறக்கவும், நோயுறவும் நேரிட்டதென்பது நினைவுகூரத்தக்கது.

ஆழம் குறைந்த கடல் பகுதியின் அடிப்பாகத்திலிருந்து பல இலட்சம் பாலிப் உயிரிகள் ஒன்றிணைந்து பவளப்பாறைகளை உருவாக்குகின்றன. பவளப்பாறைகளைச் சார்ந்து கடலில் 4,000 வகையான மீன்கள், ஆயிரக்கணக்கான கடல்வாழ் உயிரினங்கள், கடல் தாவரங்கள் வாழ்ந்துகொண்டிருக்கின்றன.

வளிமண்டலத்திலுள்ள கார்பன் டயோக்சைட்டை உட்கிரகித்து கல்சியம் கார்பனேட்டாக மாற்றுவதால், உலகின் சுற்றுச்சூழலை பாதுகாப்பதில் பவளப்பாறைகளுக்கும் பெரும் பங்கு உள்ளது. மேலும் கழிவுநீர் கலப்பு, பருவநிலை மாற்றம், கடலில் வெப்பம் அதிகரித்தல் உள்ளிட்ட காரணங்களாலும் பவளப்பாறைகள் அழிந்துவருகின்றன.

எனவே, கடலில் ஏற்படும் மாசை கட்டுப்படுத்துவதற்கு உலக நாடுகள் கூட்டாக நடவடிக்கை எடுப்பது மட்டுமே கடல் சூழல் பாதுகாப்புக்கு வழிவகுக்கும்.

தெரிந்து தெரிந்தும் தவறு விட்டவர்களைக் கண்டறிந்து அவர்களுக்கு உயர்ந்தபட்ச தண்டனைகளை வழங்குவதே இப்போதுள்ள தேவையாகும். அப்போதே எதிர்காலத்தில் இப்படியான தவறுகளை தடுக்கலாம்.

## கொரோனா மூன்றாம் அலையில் கிழக்கு மாகாணத்தில் தொற்றுக்குள்ளானோரின் எண்ணிக்கை 10 ஆயிரத்தை தாண்டியது

### 167 பேர் உயிரிழப்பு

(அப்துல்சலாம் யாசீம்)

கிழக்கு மாகாணத்தில் கடந்த ஏப்ரல் மாதம்முதல் மூன்றாவது அலையில் 10 ஆயிரத்து 500இற்கும் மேற்பட்ட கொரோனா நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளதாகவும், திருகோணமலை மாவட்டத்தில் ஆகக்கூடிய நோயாளர்களாக 2607 பேர் தொற்றினால் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஏ.ஆர்.எம்.தௌபீக் தெரிவித்தார்.

திருகோணமலையிலுள்ள கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் பணியகத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

இதனடிப்படையில் மட்டக்களப்பு மாவட்டத்தில் 2044 பேர் இனங்காணப்பட்டுள்ளதாவும், அம்பாறை மாவட்டத்தில் ஆயிரத்து 314 பேர் தொற்றுடன் இனங்காணப்பட்டுள்ள நிலையில், கல்முனை பிராந்தியத்தில் 400 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் கிழக்கு மாகாணத்தில் மூன்றாவது அலையில் 167 பேர் உயிரிழந்துள்ளதாகவும் கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் தெரிவித்தார்.



இதேவேளை, கடந்த மாத இறுதி வாரத்தில் 49 மரணங்கள் ஏற்பட்டுள்ள நிலையில், நேற்று முன்தினம் மாத்திரம் கிழக்கு மாகாணத்தில் 10 மரணங்கள் சம்பவித்துள்ளன.

மட்டக்களப்பு மாவட்டத்தில் 6 மரணங்களும், திருகோணமலையில் இரண்டு மரணங்களும் கல்முனை பிராந்தியத்தில் இரண்டு மரணங்களும் சம்பவித்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

அத்துடன், இன்றுமுதல் பொதுமக்களுக்கான தடுப்பூசிகள் வழங்கும் நிகழ்வு இடம்பெற்றுவருகின்ற நிலையில், 60 வயதுடையவர்கள் மேலும் ஒவ்வொரு நோய் உள்ளவர்கள் வைத்தியசாலைகளுக்கு கிளினிக் செல்பவர்களுக்கும், கர்ப்பிணித் தாய்மார்களுக்கும், வெளிக்கள உத்தியோகத்தர்களுக்கும் தடுப்பூசிகள் வழங்குவதற்கு மத்திய சுகாதார அமைச்சு ஆலோசனை வழங்கியுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

## மருந்தகங்களில் நிலவும் குறைபாடுகளை நிவர்த்திசெய்ய இரு வார கால அவகாசம்

(சாய்ந்தமருது நிருபர்)

கல்முனை பிராந்தியத்திலுள்ள தனியார் மருந்தகங்களில் நிலவும் குறைபாடுகள் அடுத்த 2 வாரங்களில் நிவர்த்தி செய்யப்படவேண்டுமென கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டொக்டர் ஜீ.சுகுணன் அறிவுறுத்தியுள்ளார்.



இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

கல்முனை பிராந்தியத்திலுள்ள தனியார் மருந்தகங்கள் சிலவற்றில் பாரிய குறைபாடுகள் நிலவிவருகின்றமை கண்டறியப்பட்டுள்ளது.

சில மருந்தகங்களில் காலாவதியான மருந்துகள் விற்பனை செய்யப்படுவதாகவும், நாட்டில் ஏற்பட்டுள்ள அசாதாரண சூழ்நிலையைப் பயன்படுத்தி கூடுதலான விலைக்கு மருந்துகள் விற்பனை செய்யப்படுவதாகவும் முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்று வருகின்றன.

இவற்றைக் கருத்திற்கொண்டு பெரியநீலாவணை தொடக்கம் பொத்துவில் வரையான கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை பிரிவில் இயங் வருகின்ற 64 தனியார் மருந்து விற்பனை நிலையங்களையும் பொலிஸ் மற்றும் விசேட அதிரடிப்படையினரின் ஒத்துழைப்புடன் சுகாதாரத்துறையினரால் திடீர் பரிசோதனை மேற்கொள்ளத் திட்டமிட்டுள்ளோம்.

ஆகையால் மருந்தகங்களில் நிலவும் குறைபாடுகள் அனைத்தையும் இரு வாரங்களுக்குள் நிவர்த்திசெய்துகொள்ள வேண்டும். இல்லையேல் சோதனையின்போது கண்டுபிடிக்கப்பட்டால் சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு, உரிய மருந்தகம் மூடப்படும் - என அவர் மேலும் தெரிவித்தார்.

## நிந்தவூர் கொரோனா சிகிச்சை நிலையத்திற்கு மருத்துவ உபகரணங்கள் வழங்கிவைப்பு

(நூருல் ஹுதா உமர்)

முன்னாள் சுகாதாரத்துறை இராஜாங்க அமைச்சரும், நாடாளுமன்ற உறுப்பினருமான பைசல் காசிம் சுகாதார அமைச்சரிடம் விடுத்த அவசர



வேண்டுகோளையடுத்து அவசர சிகிச்சைப் பிரிவுக்குத் தேவையான உபகரணங்கள், நிந்தவூர் ஆதார வைத்திய சாலையில் அமையப்பெற்றுள்ள கொரோனா சிகிச்சை நிலையத்திற்கு 10 வகையான மருத்துவ உபகரணங்கள் நேற்று முன்தினம் வழங்கப்பட்டன.

இந்நிகழ்வில் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் திட்டமிடல் பணிப்பாளர் டாக்டர் மாஹிர், நிந்தவூர் பிரதேச செயலாளர், நிந்தவூர் ஆதார வைத்தியசாலை வைத்தியர்கள், தாதியர்கள், ஊழியர்கள் உள்ளிட்ட சுகாதார முக்கிய அதிகாரிகள் மற்றும் பிரதேச சபை உறுப்பினர்கள் உட்பட பலரும் கலந்துகொண்டனர்.

## தங்கபுரம் கோயிலில் வழிபாட்டில் ஈடுபட்ட 12 பேர் சம்பூர் பொலிஸாரால் கைது!

(ஞா. தட்சாயினி)

மூதூர் கிழக்கு பள்ளிக்குடியிருப்பு, தங்கபுரம் ஸ்ரீ நாகம்மாள் கோயிலில் கடந்த ஞாயிற்றுக்கிழமை மத வழிபாடுகளில் ஈடுபட்டிருந்த அந்தக் கோயிலின் தலைவர் உட்பட 12 பேர் சம்பூர் பொலிஸ் நிலைய பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்டனர்.

இவர்கள் நேற்று முன்தினம் மூதூர் நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்செய்யப்பட்டு குறித்த அந்த 12 பேரையும் 14 நாட்கள் தனிமைப்படுத்தும் சட்டத்தின் கீழ் தனிமைப்படுத்துமாறு நீதிமன்றத்தால் தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது.

நாட்டில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள சட்டங்களை மீறி ஒன்றுகூடுவோருக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என பொலிஸ் பிரிவு அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.




## ஒட்டமாவடி சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தில் தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கை

(கல்குடா நிருபர்)

மட்டக்களப்பு மாவட்டத்தில் நேற்று ஆயிரம் பேருக்கு தடுப்பூசிகளை வழங்கும் நடவடிக்கைகள் மட்டக்களப்பு மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் நா.மயூரனின் வழிகாட்டலில் நடைபெற்றது.





அந்தவகையில் ஓட்டமாவடி சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை கொவிட்-19 தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கைகள் ஓட்டமாவடி சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் எம்.எச்.எம்.தாரிக் தலைமையில் ஆரம்பித்துவைக்கப்பட்டன.

இதன்போது ஓட்டமாவடி பிரதேச சபையின் உறுப்பினர்கள், சபையின் செயலாளர் மற்றும் சபை உத்தியோகத்தர்கள், ஊழியர்கள், சுகாதாரத்துறையினர் ஆகியோருக்கு கொவிட்-19 தடுப்பூசிகள் ஏற்றப்பட்டுள்ளன.

கொவிட்-19 தடுப்பூசி ஏற்றும் நிகழ்வில் மேற்பார்வை பொதுச் சுகாதார பரிசோதகர் ஏ.எல்.நௌபர், பொதுச் சுகாதார பரிசோதகர்கள், சுகாதார வைத்திய அதிகாரி அலுவலக உத்தியோகத்தர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தின் 14 சுகாதார வைத்திய அதிகாரிகள் காரியாலயம் ஊடாக கொவிட்-19 தடுப்பூசி ஏற்றும் பணிகள் நேற்று செவ்வாய்க்கிழமை தொடக்கம் இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## ஏறாவூர் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 2000 பேருக்கு தடுப்பூசி ஏற்றும் பணி ஆரம்பம்

(ஏறாவூர் நிருபர் நாஸர்)

ஏறாவூர் பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் சுமார் இரண்டாயிரம் பேருக்கு சினோபார்ம் கொரோனா தடுப்பூசி செலுத்தும் பணிகள் நேற்று ஆரம்பிக்கப்பட்டன.

அடுத்த மூன்று நாட்களுக்கு செயற்படுத்தப்படும் இத்திட்டத்தின்கீழ் முதற்கட்டமாக பொலிஸ் உத்தியோகத்தர்கள், பிரதேச செயலகம் மற்றும் நகர சபை ஊழியர்களுக்கும் தடுப்பூசி ஏற்றப்பட்டது.

மட்டக்களப்பு பிராந்திய தொற்று நோயியலாளர் குணராஜா ஜயசேகரன் பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி சாபிறா வசீம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி கீர்த்தி ஜயந்த ஆகியோரின் கண்காணிப்பில் இப்பணிகள் நடைபெற்றன.





இன்று மிச்நகர் மற்றும் ஏறாவூர் - 3 பிரிவு ஆகிய பிரதேசங்களிலுள்ள 60 வயதக்கு மேற்பட்டோருக்கும் நாளை மீராகேணி மற்றும் ஏறாவூர்-3 பிரிவு ஆகிய பிரதேசங்களில் வசிக்கும் வயோதிபர்களுக்கும் நாளை மறுதினம் ஏறாவூர்-2பி பிரதேசத்து வயோதிபர்களுக்கும் தடுப்பூசி செலுத்தப் படவுள்ளது.

அரசாங்க அலுவலர்கள் மிகுந்த ஆர்வத்துடன் தடுப்பூசியை பெற்றுக் கொண்டதை அவதானிக்க முடிந்தது.

# ஐ.நாவின் 76ஆவது தலைவராக மாலைதீவு வெளியுறவுத்துறை அமைச்சர் தெரிவு



ஐக்கிய நாடுகள் பொதுச் சபையின் தலைவராக மாலைதீவு வெளியுறவுத்துறை அமைச்சர் அப்துல்லாஹ் ஷாகித் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

ஒவ்வொரு வருடமும் சுழற்சி அடிப்படையில் ஐ.நாவின் பொதுக்குழு தலைவர் தெரிவுசெய்யப்படுவார். பிராந்திய அடிப்படையில் சுழற்சி முறையில் இந்த வாய்ப்பு வழங்கப்படும்.

இந்நிலையில், 2021 - 22இற்கான வாய்ப்பு ஆசிய-பசுபிக் குழுவுக்கு வழங்கப்பட்டது. அப்போது ஆப்கானிஸ்தான் வெளியுறவுத்துறை அமைச்சர் சல்மாய் ரசூல் எதிர்த்துப் போட்டியிட்டார்.

இதையடுத்து நடந்த தேர்தலில் அப்துல்லாஹ் ஷாகித்துக்கு 143 வாக்குகளும், எதிராக 43 வாக்குகளும் கிடைத்துள்ளன. இதனைத் தொடர்ந்து ஐ.நாவின் 76ஆவது தலைவராக அப்துல்லாஹ் ஷாகித் பொறுப்பேற்கவுள்ளார்.

# உலகம் முழுவதும் கொரோனாவால் 37.52 இலட்சம் பேர் உயிரிழப்பு

உலகம் முழுவதும் கொரோனாவால் உயிரிழந்தோரின் எண்ணிக்கை 37.52 இலட்சத்தைக் கடந்துள்ளதுடன், பாதிக்கப்பட்டோரின் எண்ணிக்கை 17.43 கோடியை தாண்டியுள்ளது.



இதேவேளை, கொரோனாவின் இரண்டாம் அலை தீவிரமடைந்துள்ள இந்தியாவில் தற்போது கொரோனாவின் தாக்கம் குறைந்து நாளொன்றில் ஒரு இலட்சத்துக்குக் குறைவானோர் பாதிக்கப்படுவதாக பதிவாகியுள்ளது.

சீனாவின் வூஹான் நகரில் கடந்த 2019ஆம் ஆண்டு கண்டறியப்பட்ட கொவிட் - 19 வைரஸ், உலகம் முழுவதுமுள்ள 222 நாடுகள் மற்றும் பெரு நகரங்களில் பரவி பெரும் மனிதப் பேரழிவை ஏற்படுத்தி வருகிறது. கொரோனாவை கட்டுப்படுத்துவதற்கான தடுப்பூசிகள் கண்டுபிடிக்கப்பட்டு மக்கள் பாவனைக்குக் கொண்டுவரப்பட்டுள்ளபோதும் நாளுக்கு நாள் உலகளவில் பாதிக்கப்படுவோரின் எண்ணிக்கை அதிகரித்துக்கொண்டே செல்கிறது.

கொரோனா பாதிப்பு மற்றும் உயிரிழப்பு விகிதங்களின்படி உலக நாடுகளில் அமெரிக்கா, இந்தியா, பிரேஸில் ஆகிய நாடுகள் முன்னிலையிலுள்ளன.

அந்தவகையில் உலகம் முழுவதும் கொரோனாவால் இதுவரை 17,43,82,022 பேர் பாதிக்கப்பட்டுள்ளதுடன், 37,52,207 பேர் உயிரிழந்துள்ளனர்.

இந்நிலையில், உலகம் முழுவதும் கொரோனாவால் பாதிக்கப்பட்டோரில் இதுவரை 15,76,48,574 குணமடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

அத்தோடு கொரோனாவால் பாதிக்கப்பட்டோரில் 1,27,03,385 பேர் உலகம் முழுவதுமுள்ள பல்வேறு வைத்தியசாலைகளில் சிகிச்சைபெற்று வருவதுடன், அவர்களில் 86,518 பேரின் நிலை கவலைக்கிடமான நிலையிலுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்நிலையில், கொரோனாவின் 2ஆம் அலையால் பெரிதும் பாதிக்கப்பட்ட இந்தியாவில் பாதிக்கப்படுவோரின் எண்ணிக்கை குறைந்து வருகிறது.

அந்தவகையில் இந்தியாவில் கடந்த 63 நாட்களுக்குப் பின்னர் ஒரு இலட்சத்திற்கு கீழ் பாதிப்பு குறைந்துள்ளது. நேற்று ஒருநாளில் 86,498 பேருக்கே புதிதாக கொரோனா தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது.

இந்தியா முழுவதும் மொத்தமாக இதுவரை 2,89,96,949 பேர் பாதிக்கப்பட்டுள்ளதுடன், 3,51,344 பேர் உயிரிழந்துள்ளனர்.

அந்தவகையில் அமெரிக்காவில் மொத்தமாக இதுவரை 3,42,27,237 பேர் பாதிக்கப்பட்டுள்ளதுடன், 6,12,701 பேர் உயிரிழந்துள்ளனர்.

மேலும், கொரோனா பாதிப்பில் உலகளவில் மூன்றாம் இடத்திலுள்ள பிரேஸிலில் இதுவரை 1,69,85,812 பேர் பாதிக்கப்பட்டுள்ளதுடன், 4,74,614 பேர் உயிரிழந்துள்ளனர்.

பிரேஸிலுக்கு அடுத்ததாக பிரான்ஸ், துருக்கி, ரஷ்யா, பிரித்தானியா மற்றும் இத்தாலி ஆகிய நாடுகளில் பாதிக்கப்படுவோரின் எண்ணிக்கை அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கனடாவில் பரவும் மர்ம மூளை நோய்: 48 பேர் பாதிப்பு: 6 பேர் உயிரிழப்பு

கனடாவின் நியூ பிரன்ஸ்விக்கில் பரவும் மர்மமான மூளை நோய் மக்களிடம் பீதியை ஏற்படுத்தியுள்ளது.

இந்த நோய் எப்படி, எங்கிருந்து தோன்றியது, எந்தவிதமான நோய் என புரியாமல் அங்குள்ள நரம்பியல் மருத்துவர்கள் குழம்பிப்போயுள்ளனர். இந்த நோய் 48 பேரை பாதித்ததில் 6 பேர் உயிரிழந்துவிட்டனர்.

இந்த நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு தூக்கமின்மை, நினைவுத்திறன் குறைதல் மற்றும் பார்வையில் மாயத்தோற்றம் ஆகிய அறிகுறிகள் காணப்படுகின்றன. பலர் ஏற்கனவே இறந்துபோனவர்களை காண்பதாகக் கூறி பெரும் அச்சத்தை ஏற்படுத்தி வருகின்றனர்.

'செல்போன் டவர்'களிலிருந்து வெளியாகும் கதிரியக்கம்தான் இதற்குக் காரணம் என பல மருத்துவ நிபுணர்கள் தெரிவித்துள்ளனர். கொரோனா தடுப்பூசியும் ஒரு காரணமாக இருக்கலாம் என ஒருசாரார் கூறிவருகின்றனர்.

# எய்ட்ஸால் பாதிக்கப்பட்ட பெண்ணின் உடலில் 32 முறை உருமாறிய கொரோனா



தென்னாபிரிக்காவில் எய்ட்ஸ் நோயால் பாதிக்கப்பட்ட பெண்ணின் உடலில் கொரோனா 32 முறை உருமாறியுள்ளதாக ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இதுகுறித்து ஆய்வாளர்கள் மேலும் தெரிவிக்கையில்,

தென்னாபிரிக்காவில் எய்ட்ஸ் வைரஸால் கடுமையாக பாதிக்கப்பட்ட 36 வயது இளம்பெண்ணுக்கு கடந்த ஆண்டு செப்டெம்பர் மாதம் கொரோனா தொற்று ஏற்பட்டது. எய்ட்ஸ் காரணமாக அந்தப் பெண்ணின் உடலில் நோய் எதிர்ப்புச் சக்தி மிகவும் குறைவாக இருந்தது.

இந்தச் சூழலில் அவரது உடலை ஆராய்ச்சி செய்ததில் 216 நாட்களாக கொரோனா வைரஸ் 32 வகைகளாக உருமாறியிருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது என அவர்கள் தெரிவித்தனர்.

# தென்னாபிரிக்காவில் மோசடி வழக்கு: காந்தியின் கொள்ளு பேத்திக்கு சிறைத்தண்டனை

மகாத்மா காந்தியின் பேத்தியும், தென்னாபிரிக்காவில் எம்.பியாக இருந்தவருமான இலா காந்தியின் மகள் ஆஷிஷ் லதா ராம்கோபினுக்கு பணமோசடி வழக்கில் தென்னாபிரிக்க நீதிமன்றம் 7 ஆண்டுகள் சிறைத் தண்டனை வழங்கியுள்ளது.



காந்தியின் கொள்ளுப் பேத்தியான 56 வயதான லதா, இந்தியாவிலிருந்து சுங்கவரி இல்லாமல் பொருட்களை இறக்குமதிசெய்து தருவதாக மகராஜ் என்ற தொழிலதிபரிடமிருந்து இந்திய மதிப்பில் சுமார் 3 கோடியே 33 இலட்சம் ரூபா பெற்று ஏமாற்றியுள்ளார் என டர்பன் நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டது.

கடந்த 2015இல் தொடரப்பட்ட இந்த வழக்கில் அவருக்கு பின்னர் பிணை வழங்கப்பட்டாலும், இப்போது தீர்ப்பு வெளியாகி, மேல்முறையீடு செய்யமுடியாது என்ற நிபந்தனையுடன் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.



**வண்டலூரில் சிங்கங்கள் கொரோனா தொற்றுக்குள்ளாகி அதில் ஒரு சிங்கம் உயிரிழந்த நிலையில், தற்போது முதுமலையிலுள்ள யானைகள் காப்பகத்திலுள்ள யானைகளுக்கும் கொரோனா பரிசோதனை மேற்கொள்ளப்பட்டுள்ளது.**

# புனே தனியார் இரசாயன ஆலையில் தீ: 15 பெண்கள் உட்பட 18 பேர் உயிரிழப்பு



புனேவிலுள்ள தனியார் இரசாயன ஆலையில் ஏற்பட்ட தீ விபத்தில் 15 பெண்கள் உட்பட 18 பேர் உயிரிழந்துள்ளனர்.

மகாராஷ்டிரா மாநிலம் புனே அருகிலுள்ள பிரன்கட் பகுதியில் எஸ்.வி.எஸ். அக்வா டெக்னாலஜிஸ் என்ற இரசாயன ஆலையில் குளோரின் டை ஒட்சைட் தயாரிக்கும் பணி நடைபெற்று வருகிறது.

இந்நிலையில், நேற்று பிற்பகல் திடீரென இயந்திரமொன்று வெடித்து தீப்பிடித்துள்ளது. இதில் ஊழியர்கள் அனைவரும் தீயில் சிக்கிக்கொண்டுள்ளனர்.

இதனையடுத்து சம்பவ இடத்துக்கு விரைந்த தீயணைப்புத் துறையினர் உள்ளே சென்று உள்ளே சிக்கியவர்களை மீட்டுள்ளனர்.

விபத்தில் சிக்கியோரில் 18 பேரின் உடல்கள் எரிந்த நிலையில் மீட்கப்பட்டன. அதில் 15 பெண்கள் எனக் கூறப்படுகிறது.

சம்பவத்தில் ஒருவர் மட்டும் காயத்துடன் தப்பியுள்ளார். அவர் சிகிச்சைக்காக மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

# கொரோனா வைரஸ் பரவியதா? பரப்பப்பட்டதா?

## சீன ஆய்வகத்தைச் சூழும் மர்மம்

உலக மக்கள் அனைவரது மனதிலும் தோன்றியுள்ள மிகப்பெரிய கேள்வி கொரோனா தொற்று பரவல் எப்போது முடிவுக்கு வரும்? அனைவரும் கொரோனா தடுப்பூசி செலுத்திக்கொள்வதே அத்தொற்று பரவலை முடிவுக்குக் கொண்டுவருவதற்கான வழி என்று தீநுண்மியியல் விஞ்ஞானிகளும் மருத்துவ வல்லுநர்களும் தொடர்ந்து தெரிவித்து வருகின்றனர்.

முடிவு பற்றிய கேள்வி ஒருபுறமிருக்க, தொடக்கம் பற்றிய கேள்விகளும் தொடர்ந்து எழுப்பப்பட்டு வருகின்றன. ஆனால், அவற்றுக்கு இன்னும் விடை கிடைக்கவில்லை. உலகில் கொரோனா தீநுண்மி பரவத் தொடங்கி சுமார் ஒன்றரை ஆண்டுகளாகிவிட்டபோதிலும் அது எங்கிருந்து, எவ்வாறு மனிதர்களுக்குப் பரவியது என்ற கேள்வியும் அதைச் சுற்றியுள்ள மர்மங்களும் தொடர்ந்து நீடிக்கின்றன.

கொரோனா தொற்று பரவத் தொடங்கியபோதே, வைரஸின் தோற்றம் குறித்து பல்வேறு ஊகங்கள் முன்வைக்கப்பட்டன. அதில் 3 ஊகங்கள் முக்கியத்துவம் பெற்றன.

1. வௌவால் உள்ளிட்ட விலங்குகளிடமிருந்து மனிதர்களுக்கு கொரோனா வைரஸ் பரவியது.
2. மனிதர்களின் உடலிலேயே வைரஸ் உருவானது.
3. சீனாவின் வூஹான் ஆய்வகத்திலிருந்து கொரோனா வைரஸ் கசிந்து மனிதர்களுக்குப் பரவியது.

இந்த ஊகங்களிலுள்ள உண்மைத்தன்மையைக் கண்டறிவதற்காக உலக சுகாதார அமைப்பு (டபிள்யூ.ஹெச்.ஓ.) தனிக் குழுவை அமைத்தது. சீனாவின் வூஹான் நகரத்தில்தான் கொரோனா தொற்று பாதிப்பு முதன்முதலாகக் கண்டறியப்பட்டதால் அந்தக் குழு அங்கு செல்லத் திட்டமிட்டது. எனினும், சீனா அதற்கான அனுமதியை காலம் தாழ்த்தியே அளித்தது. வெளிப்படையான ஒத்துழைப்பையும் அளிக்கவில்லை. இந்த விவகாரத்தில் உறுதியான விடைகள் எதுவும் அக்குழுவுக்குத் தென்படவில்லை.

### ஊகங்களின் ஆய்வு

உலகின் பல்வேறு பகுதிகளில் விலங்கினத்திலிருந்து ஏற்கனவே பலவித கொரோனா வைரஸ்கள் மனிதர்களுக்குப் பரவி பாதிப்புகளை ஏற்படுத்தியுள்ளன. முக்கியமாக மத்திய கிழக்கு நாடுகளில் பரவிய 'மெர்ஸ்' கொரோனா வைரஸ் ஒட்டகத்திலிருந்து மனிதர்களுக்குப் பரவியதாக நம்பப்படுகிறது.

எனவே, தற்போது பரவிவரும் கொரோனா வைரஸையும் வூஹான் கடல் உணவுச் சந்தையிலிருந்து மனிதர்களுக்குப் பரவியிருக்கலாம் என்ற ஊகம் பரவலாக எழுந்தது. இண்டெக்ஸ் கேஸ் என்கிற முதலில் அறியப்பட்ட நோயாளிக்கு அந்தச் சந்தையிலிருந்து தொற்று ஏற்பட்டதாக முதலில் கூறப்பட்டது.

கொரோனா மனிதர்களின் உடலிலேயே உருவானதாக எழுப்பப்படும் ஊகத்தை உறுதி செய்யவும் போதிய ஆதாரங்கள் இல்லை.

தற்போது பல்வேறு தகவல்களின் பகுப்பாய்வை அடிப்படையாகக்கொண்டு அமெரிக்கா, பிரித்தானியாவைச் சேர்ந்த சில விஞ்ஞானிகள், கொரோனா வைரஸ் வூஹான் ஆய்வகத்திலிருந்து கசிந்ததாகக் குற்றச்சாட்டுகளை முன்வைத்துள்ளனர். இதனால் வூஹான் ஆய்வகத்தின் மீதான ஊகமும் சந்தேகமும் தற்போது மீண்டும் வலுப்பெறத் தொடங்கியுள்ளன.

அவர்கள் குற்றச்சாட்டை முன்வைப்பதற்குக் காரணம் இல்லாமல் இல்லை. வூஹான் ஆய்வகத்தில் நடைபெற்றுவந்த 'கெய்ன்-ஆஃப்-ஃபங்க்ஷன்' எனப்படும் வைரஸ்களைக் குறித்த ஆராய்ச்சியே, அந்த ஆய்வகம் மீதான சந்தேகப் பார்வையை வலுவடையச் செய்கிறது.

### தீநுண்மியியல் ஆராய்ச்சி

தீநுண்மிகள் (வைரஸ்) உள்ளிட்ட நுண்ணுயிர்களை ஆய்வகத்தில் வளர்த்து அதன் எதிர்ச்சக்திகளை உருவாக்கும் ஆராய்ச்சியே 'கெய்ன்-ஆஃப்-ஃபங்க்ஷன்'. நுண்ணுயிர்களை முழுமையாக ஆராய்ந்து, ஆய்வகத்திலேயே புதிய வகைகளை உருவாக்கி அது தொடர்பான அனைத்து செயற்பாடுகளின் ஆராய்ச்சிகளை மேற்கொள்வதே அதன் அடிப்படை. எதிர்காலத்தில் இதுபோன்ற தீநுண்மிகள் தோன்றி உயிரினங்களுக்கு நாசம் விளைவிப்பதைத் தடுக்கும் நோக்கிலேயே இந்த ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்படும்.

தீநுண்மிகளின் மரபணுக்களை விரிவாக ஆராய்ந்து அவற்றுக்குத் தடுப்பு மருந்து தயாரிப்பது தொடர்பான திட்டங்களைத் தயாராக வைப்பதற்கும் இதுபோன்ற ஆராய்ச்சிகள் முன்னெடுக்கப்படுகின்றன.



> "சீனா வெளிப்படைத்தன்மையுடன் நடந்துகொண்டால் மட்டுமே கொரோனா வைரஸ் குறித்த உண்மை உலகத்துக்குத் தெரியவரும்''
> - நிபுணர்கள்

### கடும் பாதுகாப்புகளுடன் ஆராய்ச்சி

வைரஸ்கள் தொடர்பான ஆராய்ச்சிகள் அனைத்தும் உயிரிப் பாதுகாப்பில் 4ஆம் தர நிலையைப் பெற்ற ஆய்வகங்களில் மட்டுமே மேற்கொள்ளப்பட வேண்டும் என்று சர்வதேச அளவில் விதிமுறைகள் வகுக்கப்பட்டுள்ளன.

அத்தகைய ஆய்வகங்களில் பணியாற்றுவோருக்கு அந்த வைரஸ்களால் எந்தவித பாதிப்பும் ஏற்படாமல் இருக்கும் வகையில் பாதுகாப்பு வசதிகள் செய்யப்பட்டிருக்க வேண்டியது கட்டாயம். ஆராய்ச்சிக்கூடத்திலுள்ள பயங்கரமான வைரஸ்கள், அங்கிருந்து தவறுதலாகக்கூட வெளியேறாமல் இருப்பதற்கான கட்டமைப்புகளையும் அந்த விதிமுறைகள் உறுதிசெய்கின்றன.

### கட்டமைப்பு குறைபாடு

'கெய்ன்-ஆஃப்-ஃபங்க்ஷன்' ஆராய்ச்சியானது வூஹான் ஆய்வகத்தில் மேற்கொள்ளப்பட்டது. ஆனால், அந்த ஆய்வகத்தில் உரிய பாதுகாப்பு கட்டமைப்புகள் செய்யப்படவில்லை என பலர் குற்றஞ்சாட்டி வருகின்றனர். குவாங்டாங், குவாங்ஷி, யூனான் மாகாணங்களிலுள்ள குகைகளில் காணப்படும் வௌவால்கள், அவற்றில் காணப்படும் வைரஸ்கள் தொடர்பாக அந்த ஆய்வகத்தில் ஆராய்ச்சிகள் தொடர்ந்து மேற்கொள்ளப்படுகின்றன.

பாதுகாப்பு குறைபாட்டால் அந்த வைரஸ்கள் வெளியே கசிந்தால், மனிதர்களுக்குப் பெரும் பாதிப்பை ஏற்படுத்த வாய்ப்புகள் உள்ளதாக விஞ்ஞானிகள் பலர் குற்றஞ்சாட்டியிருந்தனர்.

இந்தப் பின்னணியில்தான் வூஹான் தீநுண்மியியல் ஆய்வகத்தின் மீது கொரோனா விவகாரம் தொடர்பாக சந்தேகங்கள் முன்வைக்கப்படுகின்றன.

### புதிய ஆதாரங்கள்

வூஹான் ஆய்வகத்தைச் சேர்ந்த விஞ்ஞானிகள் மூவர், 2019ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் தற்போதைய கொரோனா தொற்று பாதிப்புக்கான அறிகுறிகள் உள்ளிட்டவற்றுடன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதாக அமெரிக்க உளவுப் பிரிவின் தகவல்களை ஆதாரமாகக்கொண்டு 'வோல் ஸ்ட்ரீட் ஜர்னல்' அண்மையில் செய்தி வெளியிட்டிருந்தது.

அதைத் தொடர்ந்து வூஹான் ஆய்வகம் கொரோனா தோற்றுவாய் என்கிற கருத்து மீண்டும் உயிர்த்தெழுந்துள்ளது. இக்குற்றச்சாட்டை சீனா தொடர்ந்து மறுத்து வந்தாலும், கொரோனா வைரஸ் எங்கு தோன்றியது என்பது தொடர்பான விரிவான ஆய்வுகளை முன்னெடுக்க வேண்டும் என்று அமெரிக்கா, இந்தியா உள்ளிட்ட நாடுகள் வலியுறுத்தி வருகின்றன. அது எங்கு, எவ்வாறு தோன்றியது என்பதை துல்லியமாக அறிந்துகொள்வதன் மூலமாகத்தான் அதன் பரவலை எப்படி கட்டுப்படுத்துவது, தடுப்பது என்று அறியமுடியும்.

### தொடரும் ஆய்வுகள்

பல்வேறு உளவுத் தகவல்கள் மீண்டும் சீனாவின் மீது சந்தேகக்கண் விழச்செய்துள்ள நிலையில், கொரோனா தீநுண்மியின் தோற்றுவாய் குறித்த விவகாரத்தை விரைந்து விசாரித்து தகவல்களைச் சேகரிக்குமாறு அமெரிக்க உளவுப் பிரிவுக்கு அந்நாட்டு ஜனாதிபதி ஜோ பைடன் உத்தரவிட்டுள்ளார். அதற்காக 90 நாட்கள் காலக்கெடுவையும் அவர் விதித்துள்ளார்.

இந்த விவகாரத்தில் சீனா வெளிப்படைத்தன்மையுடன் நடந்துகொண்டால் மட்டுமே கொரோனா வைரஸ் குறித்த உண்மை உலகத்துக்குத் தெரியவரும் என்று நிபுணர்கள் தெரிவிக்கின்றனர்.

# 10 ஆயிரம் மீற்றர் ஓட்டத்தில் உலக சாதனை படைத்த சிபான் ஹஸன்




பெண்களுக்கான 10 ஆயிரம் மீற்றர் ஓட்டப் போட்டியில் நெதர்லாந்து வீராங்கனை சிபான் ஹஸன் புதிய உலக சாதனை படைத்துள்ளார். குறித்த 10 ஆயிரம் மீற்றர் தூரத்தை 29 நிமிடங்கள் 06.82 வினாடிகளில் ஓடி முடித்து ஐந்து வருடங்களின் பின்னர் உலக சாதனையை முறியடித்துள்ளார்.

2016ஆம் ஆண்டு ரியோ ஒலிம்பிக் போட்டியில் பெண்களுக்கான 10 ஆயிரம் மீற்றர் ஓட்டப் போட்டியில் எத்தியோப்பிய வீராங்கனை அல்மாஸ் அயானாவினால் நிலைநாட்டப்பட்ட குறித்த உலக சாதனையை தற்போது நெதர்லாந்து வீராங்கனை சிபான் ஹஸன் முறியடித்துள்ளார்.

இதற்கு முன்னர் எத்தியோப்பிய வீராங்கனை அல்மாஸ் அயனா 29 நிமிடங்கள் 17.45 வினாடிகளில் 10 ஆயிரம் மீற்றர் ஓட்டத்தை நிறைவு செய்திருந்தார். தற்போது அச்சாதனை முறியடிக்கப்பட்டுள்ளது.







# ஐ.பி.எல். தொடரின் எஞ்சிய போட்டிகள் செப்.15 முதல் ஒக்.19 வரை



இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபையின் ஏற்பாட்டில் நடத்தப்படுகின்ற இந்தியன் பிரீமியர் லீக் தொடரின் 14ஆவது பருவ காலத்திற்கான தொடரானது கடந்த ஏப்ரல் மாதம் 9ஆம் திகதி ஆரம்பமாகி நடைபெற்று வந்தது. இந்நிலையில் ஒருசில வீரர்களுக்கு கொரோனா வைரஸ் தொற்று அடுத்தடுத்து உறுதி செய்யப்பட்டதன் மூலம் 29 போட்டிகள் நிறைவுபெற்ற நிலையில் 2021ஆம் ஆண்டுக்கான ஐ.பி.எல். தொடர் காலவரையறையின்றி ஒத்திவைக்கப்பட்டது.

இன்னும் 31 போட்டிகள் எஞ்சியிருக்கின்ற நிலையில் ஐ.சி.சி. இருபதுக்கு 20 உலகக்கிண்ண தொடர் நடைபெறுவதற்கு முன்னர் குறித்த போட்டிகள் அனைத்தையும் நடத்தி முடிப்பதற்கு இந்திய கிரிக்கட் கட்டுப்பாட்டு சபை முடிவெடுத்துள்ளது. போட்டிகள் அனைத்தும் ஐக்கிய அரபு இராஜ்ஜியத்தின் அபுதாபி, டுபாய் மற்றும் ஷார்ஜா ஆகிய மூன்று மைதானங்களில் நடைபெறவுள்ளதாக இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபை உத்தியோகபூர்வமாக அறிவித்திருந்தது.

ஆனால், தொடர் எப்போது ஆரம்பமாகும் என்பது தொடர்பிலான உத்தியோகபூர்வ அறிவிப்பு இதுவரையில் வெளியிடப்படாத நிலையில், எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 19ஆம் திகதி தொடக்கம் ஒக்டோபர் மாதம் 15ஆம் திகதி வரையில் எஞ்சிய போட்டிகள் அனைத்தும் நடைபெறுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்படுவதாக நம்பத்தகுந்த வட்டாரங்களிலிருந்து செய்திகள் கசிந்துள்ளன.

# ஒருநாள் தொடரை 2–1 என வசப்படுத்திய நெதர்லாந்து




சுற்றுலா அயர்லாந்து அணிக்கும், நெதர்லாந்து அணிக்கும் இடையிலான மூன்று போட்டிகள் கொண்ட ஐ.சி.சி. உலகக்கிண்ண சுப்பர் லீக் தொடரின் மூன்றாவதும், இறுதியுமான ஒருநாள் போட்டியில் நெதர்லாந்து அணி 4 விக்கெட்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்று மூன்று போட்டிகள் கொண்ட ஒருநாள் சர்வதேச தொடரை 2 - 1 என்ற அடிப்படையில் கைப்பற்றியது.

தொடர் வெற்றியாளரைத் தீர்மானிப்பதற்கான மூன்றாவதும், இறுதியுமான போட்டி நேற்று முன்தினம் நடைபெற்றது. போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற அயர்லாந்து அணி முதலில் துடுப்பெடுத்தாடி 49.2 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்களையும் இழந்து 163 ஓட்டங்களை மாத்திரம் பெற்றது. துடுப்பாட்டத்தில் ஹரி டெக்டர் அதிகபட்சமாக 58 ஓட்டங்களைக் குவித்தார்.

164 என்ற இலகுவான வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்குக் களமிறங்கிய நெதர்லாந்து அணி 45.5 ஓவர்கள் நிறைவில் 6 விக்கெட்களை மாத்திரம் இழந்த நிலையில் அதனை அடைந்தது. துடுப்பாட்டத்தில் ஆரம்பத் துடுப்பாட்ட வீரராகக் களமிறங்கிய ஸ்டீபன் மைபேர்க் 74 ஓட்டங்களை அதிகபட்சமாகக் குவித்தார். இவ்வெற்றியின் மூலம் நெதர்லாந்து அணி தொடரை 2 - 1 என்ற அடிப்படையில் கைப்பற்றியது.

குறித்த தொடர் நிறைவில் ஐ.சி.சி. உலகக்கிண்ண சுப்பர் லீக் தொடரின் புள்ளிப்பட்டியலில் நெதர்லாந்து அணி 20 புள்ளிகளைப் பெற்று ஒன்பதாமிடத்தையும், அயர்லாந்து அணி 20 புள்ளிகளுடன் பத்தாமிடத்தையும் பிடித்துள்ளன.

ஐ.சி.சி. உலகக்கிண்ண சுப்பர் லீக் தொடரின் அடுத்த தொடராக இலங்கை மற்றும் இங்கிலாந்து அணிகளுக்கிடையிலான தொடர் எதிர்வரும் 29ஆம் திகதி ஆரம்பமாகின்றமை குறிப்பிடத்தக்கது.

# இங்கிலாந்து அணிக்கு அபராதம் விதிப்பு



சுற்றுலா நியூஸிலாந்து அணிக்கும், இங்கிலாந்து அணிக்குமிடையிலான இரண்டு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடர் தற்போது நடைபெற்று வருகிறது. இரு அணிகளுக்கும் இடையிலான முதல் டெஸ்ட் போட்டி வெற்றி, தோல்வியின்றி சமநிலையில் நிறைவுக்கு வந்த நிலையில், குறித்த போட்டியில் குறைந்த பந்துவீச்சுப் பிரதியை மேற்கொண்ட குற்றச்சாட்டின் அடிப்படையில் இங்கிலாந்து அணிக்கு போட்டி ஊதியத்திலிருந்து 40 சதவீதம் அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

இங்கிலாந்து அணிக்கு பந்து வீசுவதற்காக வழங்கப்பட்ட நேரத்தில் இங்கிலாந்து அணி இரண்டு ஓவர்கள் குறைவாக வீசியதற்கமைய ஒரு ஓவருக்கு போட்டி ஊதியத்திலிருந்து 20 சதவீதம் அபராதம் என்ற அடிப்படையில் அணி வீரர்கள் அனைவருக்கும் மொத்தமாக 40 சதவீதம் அபராதம் விதிக்கப்பட்டுள்ளது. குறித்த குற்றச்சாட்டை இங்கிலாந்து அணித்தலைவர் ஜோ ரூட் ஏற்றுக் கொண்டதன் காரணமாக மேலதிக விசாரணைகளுக்கு செல்ல வேண்டிய அவசியம் இல்லை என்பதை சர்வதேச கிரிக்கெட் பேரவை தெளிவுபடுத்தியுள்ளது.

# ஒத்திவைக்கப்பட்ட பாகிஸ்தான் சுப்பர் லீக் தொடர் இன்று ஆரம்பம்

## இம்மாதம் 24ஆம் திகதி இறுதிப்போட்டி

பாகிஸ்தான் கிரிக்கெட் சபையின் ஏற்பாட்டில் நடைபெற்று வருகின்ற இருபதுக்கு 20 லீக் தொடர்களில் ஒன்றான பாகிஸ்தான் சுப்பர் லீக் தொடரின் ஆறாவது பருவ காலத்திற்கான தொடரானது கடந்த பெப்ரவரி மாதம் ஆரம்பமாகி நடைபெற்று வந்த நிலையில் மார்ச் மாதம் 3ஆம் திகதியுடன் 14 லீக் போட்டிகள் நிறைவடைந்த நிலையில் தொடர் காலவரையறையின்றி ஒத்திவைக்கப்பட்டது.

ஒரு சில வீரர்கள், அணிகளின் ஊழியர்கள் உள்ளிட்டவர்களுக்கு கொரோனா வைரஸ் தொற்று அடுத்தடுத்து உறுதி செய்யப்பட்டதைத் தொடர்ந்தே, தொடரானது காலவரையறையின்றி ஒத்திவைக்கப்பட்டது. மொத்தமுள்ள 34 போட்டிகளில் இன்னும் 20 போட்டிகள் மீதமுள்ள நிலையில் ஒத்திவைக்கப்பட்ட தொடர் மீண்டும் இன்று ஐக்கிய அரபு இராஜ்ஜியத்தின் அபுதாபியில் ஆரம்பமாகிறது. இன்று நடைபெறும் 15ஆவது லீக் போட்டியில் லாஹூர் கலண்டர்ஸ் - இஸ்லமாபாத் யுனைடெட் அணிகள் பலப்பரீட்சை நடத்துகின்றன.

இன்று ஆரம்பமாகும் தொடரின் எஞ்சிய லீக் போட்டிகள் அனைத்தும் எதிர்வரும் 19ஆம் திகதியுடன் நிறைவு பெறும். மாபெரும் இறுதிப் போட்டியானது எதிர்வரும் 24ஆம் திகதி நடைபெறும்.



# ஜூலை 30 ஆம் திகதி ஆரம்பமாகும் எல்.பி.எல். 2021

இலங்கை கிரிக்கெட் சபையின் ஏற்பாட்டில் கடந்த வருடம் வெற்றிகரமான முறையில் நிறைவுபெற்ற லங்கா ப்ரீமியர் லீக் தொடரின் இரண்டாவது பருவகாலத்திற்கான தொடரானது எதிர்வரும் ஜூலை 30 ஆம் திகதி முதல் ஒகஸ்ட் 22 ஆம் திகதி வரை திட்டமிட்டபடி நடைபெறும் என இலங்கை கிரிக்கெட் சபை அறிவித்துள்ளது.

நாட்டில் தற்போது கொரோனா வைரஸின் மூன்றாவது அலை மிகவும் தீவிரமாக உருவெடுத்துவரும் நிலையில் போட்டிகள் அணைத்தும் கடந்த வருடம் நடைபெற்றதைப்போன்று ரசிர்கள் இன்றிய மூடிய மைதானத்தில் நடைபெறும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

MY11CIRCLE
LPL T20
LANKA PREMIER LEAGUE 2020




# இங்கிலாந்து சுற்றுப்பயணத்தில் இணைந்த ப்ரவீன் ஜயவிக்ரம



இலங்கை அணி இங்கிலாந்துக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டு ஐ.சி.சி. உலகக்கிண்ண சுப்பர் லீக் தொடரின் 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் சர்வதேச தொடரிலும், 3 போட்டிகள் கொண்ட இருபதுக்கு 20 சர்வதேச தொடரிலும் இயோன் மோர்கன் தலைமையிலான இங்கிலாந்து அணியுடன் பலப்பரீட்சை நடத்தவுள்ளது. இரு அணிகளுக்குமிடையிலான முதல் தொடரான 3 போட்டிகள் கொண்ட இருபதுக்கு 20 சர்வதேச தொடர் எதிர்வரும் 23ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள நிலையில் குறித்த தொடருக்கான இலங்கை அணியின் 24 பேர் அடங்கிய குழாம் வெளியாகியுள்ளது.

எனினும், விளையாட்டுத்துறை அமைச்சரின் அனுமதிக்காக காத்திருக்கும் நிலையில், குறித்த குழாம் இன்னும் உத்தியோகபூர்வமாக இலங்கை கிரிக்கெட் சபையினால் வெளியிடப்படவில்லை. இவ்வாறான நிலையில், குசல் பெரேரா தலைமையிலான மட்டுப்படுத்தப்பட்ட ஓவர்கள் கொண்ட அணியில் பங்களாதேஷ் அணியுடன் டெஸ்ட் அறிமுகம் பெற்றுக் கொண்ட இளம் சுழற்பந்து வீச்சாளரான ப்ரவீன் ஜயவிக்ரம உள்வாங்கப்பட்டுள்ளார்.

ஆரம்பத்தில் உத்தேச குழாமில் இடம்பெற்றிருந்த வேகப்பந்து வீச்சாளரான கசுன் ராஜிதவுக்கு பதிலாகவே சுழற்பந்து வீச்சாளரான ப்ரவீன் ஜயவிக்ரம இங்கிலாந்து தொடருக்கான இலங்கை அணியில் இடம் பிடித்துள்ளார். பங்களாதேஷ் அணியுடன் டெஸ்ட் அறிமுகம் பெற்றுக்கொண்ட ப்ரவீன் ஜயவிக்ரம ஒரே டெஸ்ட் போட்டியில் 11 விக்கெட்களை வீழ்த்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.